திராவிடன்

மாலை : 9 16—12—55 : வெள்ளி : விலை 3 அணா மலர் : 18

"பார்த்தாயடி அத்தையாரே பந்தலிலே பாவற்காயை!"

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி!

ருஷ்யத் தலைவர்கள் வரவேற்பு செலவு மான்யம் : மக்கள் சபையில் லடாய் ?

'பந்தலிலே பாவற்காயை பார்த்தாயடி அத்தையாரே, என்பது தமிழகத்தில் ஏறத்தாழ அனைவரும் அறிந்த பழமொழி தான் என்றாலும், அதைப்பற்றிச் சிறிது விளக்கம் தர விரும்புகிறோம்.

சிற்றூர் ஒன்று. அவ்வூரில் பல குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அவ்வூரிலுள்ள அம்மையார் ஒருத்தி இயற்கை யெய்தினாள். தங்களுக்கு மிகவும் நெருங்கிய நட்பு கொண்ட அக்குடும்பத்தாரிடம் துக்கம் விசாரிக்க அடுத்த ஊரில் குடியிருந்து வரும் மாமியாரும் மருமகளும் புறப்பட்டுச் சென்றனர்! அதுபோலவே மற்றும் பலர் வந்திருந்தனர். அவர்களெல்லாம் அக் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி துக்கம் விசாரித்துச் சென்றனர். ஆனால் இந்த "மாமியார் மருமகள்" இருவரும் அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தார்களாம்; எங்கெங்கே என்ன யிருக்கிறது என்று தங்களின் பரந்த கண்ணோட்டத்தை விரித்தினராம். வந்திருந்த பெண்களெல்லாம் கட்டியழும் இடத்திற்கு அருகே ஒரு பந்தல் அமைக்கப்பட்டிருந்ததாம்!

அந்தப் பந்தலிலே பாவற்காய் கொடி படர்ந்து. சில பக்குவப்பட்டு மிருந்ததாம். இதைக்கண்ட அந்த மருமகள்-மாமியார் ஆகிய இருவரும், வந்தவேலையை விட்டு சொந்த வேலையைக் கவனிக்க ஆரம்பித்தனராம். அதாவது பாவற்காயைஎப்படியாவதுபறித்துக்கொள்ள வேண்டும், ஆனால் அந்த வீட்டாருக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தெரியக் கூடாது என்பது இவர்களின் திட்டம்.

எனவே மற்ற பெண்களுடன் கட்டியழுதுக் கொண்டு பந்தலை வலம் வரும் மருமகள், தனது மாமியாருக்கு ஜாடையாக அழுகைப் பாட்டோடு (வக்கணம்) சேர்த்து தனது எண்ணத்தைத் தெரிவித்தாளாம்! அது எப்படி தெரியுமா ?

"பந்தலிலே பாவற்காயை
பார்த்தாயடி அத்தையாரே" ஆ-ஊ

என்று அழுதாளாம் மருமகள்!

உடனே மாமியார், மருமகளை விட இன்னும் துக்க பாகத்தை மேற் கொண்டு,

'போகையிலே பார்த்துக்கலாம்
பொருத்திரடி மருமகளே' —ஆ-ஊ

என்று உரக்க அழுதாளாம்!

இதையெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த மற்றொரு அம்மை,

'விதைக் கல்லவோ — விட்டிருக்கு
வெறுமனே போங்களடி'

என்று ஒப்பாரி வைத்துப்பாடினாளாம்!

பிறகு இந்த விவரம் அறிந்து அவ் வீட்டுக்குரியவர்களும் திகைத்தனராம்!

*

ரஷ்ய நாட்டுக்கு, இந்தியத் துணைகண்டத்தின் பிரதமர் என்ற முறையில் சென்று வந்த நேரு பண்டிதர் அவர்கள், அயல்நாட்டு விவகாரங்களைப்பற்றி அந்நாட்டில் பேசினாரில்லை. மற்ற வல்லரசுகளுக் கிடையே பிணக்கினை உண்டு பண்ணக்கூடிய வகையிலும் அவரின் ருஷ்யப் பேச்சு இருக்கவில்லை.

அதுபோலவே இந்தியத் துணைக் கண்டத்துக்கு வருகை தந்து போயுள்ள பிரிட்டிஷ் — அமெரிக்கத் தலைவர்களிலிருந்து அராபிய—நேபாள நாட்டு மன்னர்கள்வரை அயல் நாட்டு விவகாரங்களைப்பற்றித் தகராறு வளரக் கூடிய வகையில் பேசினார்களில்லை.

ஆனால், ருஷ்யநாட்டுத் தலைவர்களான புல்கானின் — குருசேவ் ஆகிய இருவரும், இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்து திரும்பிச் செல்லும்

நக்கீரன்

வரை, அமெரிக்க சர்க்காரின் போக்கைப்பற்றியும், சில நேரங்களில், வெள்ளையர் இந் நாட்டை ஆண்டபோது அவர்கள கொண்டிருந்த மனப்பான்மையை நையாண்டி செய்தும், ஐ. நா. சபையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் காஷ்மீர் பிரச்னைகளைப் பற்றி யெல்லாம் வெளிப்படையாகப் பேசியிருக்கின்றனர்!

ருஷ்யத் தலைவர்கள் மேற் கண்டபிரச்னைகளைப்பற்றிபேசிய கருத்துக்கள் சரியா—தவறா என்பதல்ல நாம் இங்கே எடுத்துக் காட்ட விரும்புவது. அவர்களின் கருத்துக்களும், பேசிய பேச்சுக்களும் சரியாகவும் இருக்கலாம்.

ஆனால் விருந்தினராக வந்தஅத் தலைவர்கள்-அதிலும் தங்களுக்கு உள்ளூற வேறுபாடும்—குரோதமும் கொண்டுள்ள ஒரு நாட்டினரைப் பற்றி—இங்கே பேசுவது அரசியல் நாணயமாகுமா என்பதைப் பொதுவுடமை நாட்டிலிருந்து வந்தவர்களுக்கே புரியவில்லை யென்றால், "ஏகாதிபத்ய வெறியே எனக்கு உணவு" என கொக்கரிக்கும் டல்லஸ் போன்றவர்கள் அந்தப் பண்பு, பொறுப்பு ஆகியவைகளைப் பற்றிக் கவலைப் படுவார்களா யென்பதே நமது எடுத்துக் காட்டாகும்.

ருஷ்யத் தலைவர்கள்—தங்கள் நாட்டிலே யிருந்துக் கொண்டு, தங்களுக்கு மாறுபட்ட அபிப்ராயம் கொண்டவர்களைப் பற்றி எந்தத் தரத்தில் தாக்கினாலும் நாம் கவலைப்படப் போவதில்லை, ஆனால் ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, போன்ற வல்லரசுகளுக்கெல்லாம் தோழமையாக — உலக சமாதானத்தை நிலை நாட்ட ஐ. நா. மன்றத்திலே தீவிரப் பணியாற்றி வரும் இந்தியத் துணைக்கண்டத்திலே பவனி வந்து கொண்டு, ருஷ்யத் தலைவர்கள் இவ்விதம் பேசித்திரியலாமா? என்று கேட்கிறோம். டல்லஸ்கள் இவ்வாறு பேசினால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. உலக சமாதானத்துக்காகவே உயிரை வைத்திருப்பதாகக் கூறிக் கொள்ளும் ரஷ்யா —அண்மையிலே ஜினிவாவிலே அமெரிக்கா-பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாட்டு முதலமைச்சர்களுடன் கூடிக் குலாவிப் பேசி உலக அமைதிக்கு பாதி வழி கண்டு பிடித்து அதை அப்படியே மூடி வைத்துவிட்டு வந்துள்ள ருஷ்யப் பிரதமர் புல்கானின் அவர்களா இந்தியாவில் இவ்வாறு பேசுவது?

இதனால் கண்ட பலன் என்ன? "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான்" ஆண்டி என்பதைப்

(8-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாப் கட்டுரை

இறுதிப் பகுதி

நான் கண்ட சந்த்ராம்

ஜாட் - பாட் - தோடக் மண்டல் (5)

இந்து—முஸ்லிம் தோழமை !

“இரண்டணா ஜிலேபி !”

‘என்ன ! நான் முஸ்லிம் என்பதை அறிந்து தான்......?

‘ஆம்! தெரிந்தே தான் உன்னிடம் வந்தேன்! மதம் யாருக்கு! எம்மதமும் எனக்குச் சம்மதமே!”

‘என்ன ஆச்சரியம்! எனது வாழ்நாளில் இது தான் முதல் தடவை! தங்களைப் போன்ற தாராள சிந்தையுடையவரையும், இந்து வென்றும், முஸ்லிம் என்றும் வேற்றுமை பாராட்டாத பெருந்தகையை யும், இதுவரை நான் கண்டதுமில்லை! கேட்டது மில்லை!...எனது உள்ளம் களிப்புக் கூத்தாடுகிறது! இந்தாருங்கள்...இதைத் தட்டாமல் பெற்றுக் கொள்ளுங்கள்!”

‘அப்பா! நீ ஒரு நல்ல முஸ்லிம் தோழராக விளங்குகிறாய்! உனது உள்ளக் கிளர்ச்சியின் வேகத்தை நன்கு உணருகிறேன்! ஆனால் எனக்கெதற்கு இந்தக் கூடை நிறைய இனிப்பு வகைகள்! நான் கேட்டது இரண்டணா ஜிலேபி...!!

‘ஐயா! பணத்தைப் பற்றிப் பேசாதீர்கள்! பணம் பெரிதல்ல! மனந்தான் பெரிது! தங்களைப் போன்றே பிற இந்துக்களும் வேற்றுமை அற்றவராக விளங்கினால் நம் நாட்டில் இரத்த ஆறு ஓடுமளவுக்கு வகுப்புக் கலவரங்கள் நிகழ முடியுமா! நாம் எவ்வளவு ஒற்றுமையோடு கூடி வாழலாம்! தாங்கள் ஓர் தலைசிறந்த சமுதாயச் சீர்திருத்தத் தலைவராகக் காணப்படுகிறீர்கள்! தங்கள் பெயரை மட்டும் தெரிவித்து விட்டுப் போங்கள்!’

‘சந்த்ராம்!’

‘ஆ! சந்த்ராம் ஜீ! சந்த்ராம் ஜீ!’ தங்கள் நாமத்தை எனது நா மறந்தாலும் நான் மறவேன்! மறவேன்!...என உணர்ச்சிப் பரவசமுற்றார் கடைக்கார முஸ்லிம் தோழர்!

இச்சம்பவம் கற்பனையல்ல பஞ்சாபில் பிறந்து, தம் வாழ்க்கையின் பெரும் பகுதியை சாதி ஒழிப்புப் பணிக்காக அர்ப்பணித்து, அரிய பெரிய சாதனைகளைச் சாதித்து, எஞ்சிய வாழ்நாளாகிய இந்நாட்களைக் கிழக்கு பஞ்சாப், புரானிபாஸி கிராமத்தில் கழித்து வருகிற சந்த்ராம், டேராடூனில் ஒரு முஸ்லிம் தோழரை அணுகி இனிப்பு வாங்கி யுண்டார்! ஆச்சரியமுற்றார் மிட்டாய் கடை முஸ்லிம் தோழர்!

அக்காலம் இக் காலத்தைப் போன்றதல்ல! ‘இந்துசாயா’—‘முஸ்லிம் சாயா’ என்று பேதங் கண்டு, குத்து, வெட்டு, கொலை, கலகம் என்று உழன்ற அந்தக் காலமெங்கே! முஸ்லிம் ஓட்டல் தான் பிரியாணிக்குச் சரி என்று தேடி ஓடும் இந்தக் காலம் எங்கே!

சாதி வேற்றுமை உச்ச நிலையில் இருந்த அந்த நாளிலேயே இந்து — முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர்களுள் சந்த்ராம் முதன்மையானவர்!

விருந்தழைப்பு !

சந்த்ராம் வாய் வேதாந்தியா! காரிய வீரரா! என்பதைச் சோதிக்க விரும்பினார் ஜனாப் குவாஜில் பாஷா என்பவர். அவர் ஷியா சமூகத்தின் தலைவர். ஒரு நாள் அவர் சந்த்ராமை அணுகி ‘ஐயா! தாங்கள் என் வீட்டில் விருந்துண்ண வர வேண்டும்!’ என்றார்.

‘அதற்கென்ன தாராளமாக வருகிறேன்! ஆனால் புலால் நீங்கிய உணவாக மட்டும் இருக்க வேண்டும்’ —என்றார் சந்த்ராம்.

அவ்வாறே ஏற்பாடு செய்து, ‘சந்த்ராம் தம்முடன் உணவருந்துவதில் இந்து—முஸ்லிம் வேற்றுமை பாராட்டாதவர்’ என்ற உண்மையை நடைமுறையில் கண்டு ஜனாப் குவாஜில் பாஷா அவர்கள் சந்த்ராமை அன்று தொட்டுத் தம் அத்யந்த நண்பராகப் பெற்றார்.

இந்து—முஸ்லிம் தோழமையில் சந்த்ராம் எவ்வளவு அக்கறை உடையவர்என்பதை, அவர் காயிதே அஸம் ஜின்னா அவர்களிடம் பேட்டி கண்டு பேசியதினின்றும் அறியலாம்.

ஜின்னாவுடன் !

ஜின்னாவைக் கண்டார்! கண்டு கேட்டார் : ‘ஐயா! சைனாவிலும் முஸ்லிம் தோழர்கள் இருக்கிறார்கள்! இங்கிலாந்திலும் தோழர் லார்டு ஹேடே போன்றவர்கள் நல் முஸ்லிம்கள் இருக்கின்றனர். ஆனால் இங்கிலாந்திலுள்ள முஸ்லிம்களின் தாய் மொழி ஆங்கிலம்தான்! —அரபி அல்ல! கிராம்வெல், நெல்சன் போன்றார்களே அங்குள்ள முஸ்லிம்களின் வீரப்பிதாக்கள்!—முகம்மது கஜினியும் ருஸ்தமும் அல்ல! அவர்களது நாகரிகம், சரித்திரப் பண்பாடு, சமுதாய அமைப்பு, அரசியல் அமைப்பு அத்தனையும் ஆங்கிலேயர்களுடையவே போல்தான்!—என்றெல்லாம் கூறுகிறார்களே அதற்கென்ன காரணம்!...... ஆனால் நம் இந்திய மண்ணில் மட்டும் ஒருவர் இஸ்லாமானதும், எனது தாய்மொழி உருது! உருதுவே!—இந்தியோ மற்றெதுவோ அல்லவே அல்ல!’ என்றும் எனது வீரப்பிதாக்கள் ருஸ்தமும், ஹாருனும்தான்!—இராமனும், கிருஷ்ணனுமல்ல! என்றும் எனது நாகரிகம், சரித்திரம் அரசியல் சமுதாய அமைப்புகளெல்லாம், இந்துக்களுக்கு நேர்முரணானவை என்றும் கூறுகிறார்களே !—இதற்குந்தான் என்ன காரணம்!

திருவேடம்

அதற்கு அறிவின் சிகரம் ஜின்னா அவர்கள் எவ்வளவு அழகானமுறையில் கருத்தாழமுள்ள பதிலைப் பகர்ந்திருக்கிறார் பாருங்கள் :

ஐயா! சந்த்ராம் ஜீ! இங்கிலாந்தில் ஒருவர் இஸ்லாம் மதத்தைத் தழுவுகிறார் என்றால், அங்கே அவரை சமுதாயம் பகிஷ்கரிப்பதில்லை அங்கே அவரை ஒரு ‘மிலேச்சனா’கக் கருதுவதில்லை! ஆனால் நம் மண்ணில் யாராவது இஸ்லாம் மதத்தைக் கடைப்பிடித்தால் அவர் சாதி இந்துக்களின் கொடுமையான சமூக பகிஷ்காரத்திற்கு ஆளாக நேரிடுகிறது.—இதுவே முக்கிய காரணம். நம் நாட்டு மக்களிடம் காணும் சமூக பகிஷ்காரப் போக்கினாலேயே நமது அரசியலும், சமுதாய பொருளாதார அமைப்புகளும் வேறாக உருவாயின! இத்தகைய முரண்பாடுகளெல்லாம் ஒழிந்தால்தான் நாட்டில் ஒற்றுமை காண முடியும். இன்றேல் பகை! பகை! பகைதான்!—என்றார் ஜின்னா.

ஒற்றுமை காண முடியாததினாலேயே தான் இந்தியா இந்துஸ்தானாகவும் பாகிஸ்தானாகவும், துண்டாடப்பட்டது! என்பது நாம் இன்று கண் கூடாகக் காணும் உண்மை! இவ்விஷயத்தில் காந்தியார் உட்பட அனைவரும் தோல்வியைக் கண்டது இந்தியாவிற்கே நீங்காப் பழியாகும்! இருந்த போதிலும் ஒற்றுமைக்காகப் பாடுபட்டத் தலைவர்களை மறக்கவும், மறைக்கவும் முடியாது. அவர்களைப் பாராட்டாமல் இருக்கவும் முடியாமல், சந்த்ராம் அவர்கள் இந்த வகையில் பாராட்டப்பட வேண்டியவரன்றோ!

பாகிஸ்தான் தோற்றம் !

ஆகஸ்டு 15, 1947-ல் பாகிஸ்தான் பிரிந்தது. பாகிஸ்தான் ஆட்சி இஸ்லாமிய மத ஆட்சியாக உருவெடுத்தது.—(Theocratic State)

மதவெறி உச்சநிலை அடைந்தது! அம்மதவெறி முஸ்லிம் அல்லாத இந்துக்கள் மீது மூர்க்கமாய்ப் பாய்ந்தது. பாக்கிஸ்தானில் சிக்கிக்கொண்ட இந்துக்கள் சொல்லொணா துயரங்களுக்கு ஆளானார்கள்.

நாடு நகரங்களைத் துறந்தார்கள்! வீடு வாசல்களை இழந்தார்கள்! பல்லோர் உயிரையும் இழந்தனர். இந்துப் பெண்கள் கூறவும் கூசுமளவிற்கு துன்புறுத்தப் பட்டார்கள். குழந்தைகள் பெற்றோர்களையும் விட்டுத் தவித்துச் சோர்ந்தன. உயிர் பிழைத்தால் போதுமென்று பாகிஸ்தானை விட்டுப் பறந்தார்கள். இந்துக்கள் மூலைக்கு ஒருவராக. அப்படி ஓடியவர்கள் வழியில் கஞ்சி இன்றி உயிர்விட்டவர்கள் தொகை பெரிது! பெரிது! முதல் நாள் கோடீஸ்வரர்; அவரே மறுநாள் பிச்சை எடுப்போரானார். அப்படி சகலத்தையும் இழந்து ஓடி வந்தவர்களுக்குத்தான் ‘அகதிகள்’ என்று பெயர்,

தத்தளித்து வெறுங்கையுடனும், உயிருடனும் இந்தியா திரும்பிய அகதிகளுள் ஒருவர்தான் நமது சந்த்ராமும்.

நல்ல வேளை, சந்த்ராமிற்கு பூர்வீக நிலபுலன்கள் சொந்தமாயுள்ள புரானிபாஸி இந்தியாவுடன் சேர்ந்தது. அங்கே சென்று அகதிகள் என்போர் இயற்கையில் படவேண்டிய இன்னல்கள் இன்றி சமாளித்து வாழ்ந்து வர வாய்ப்பு கிட்டியது. இத்தகைய வாய்ப்பு அற்ற அகதிகளின் நிலை நமக்கு நன்கு தெரியும்!

அகதிக் கோலத்துடன் திரும்பிவந்த சந்த்ராமின் ஜாட்-பாட்-தோடக் மண்டல், லாகூரில் என்கதியாயிற்று! ‘அதோ கதி ஆயிற்று’ என்று நாம் சாதாரண முறையில் கூறி விடுகிறோம். அதைச் சந்த்ராம், கண்ணீர் விட்டுக் கதறி கவலை அழுக்கத்துடன் கூறும்போது கல் நெஞ்சும் கரைந்து உருகும் நிலை பெற்றே விடுகிறது என்பதை நேரில் அவரிடம் கண்டு அனுபவித்தேன்.

ஜாட்-பாட்-தோடக் மண்டல் பாகிஸ்தானிகளால் பறிக்கப்பட்டு விட்டது. தாயின் அணைப்பில் உள்ள குழந்தையைப் பறித்து ஒரே வெட்டில் துண்டு இரண்டாய்ப் போட்டால் தாயின் நிலை எவ்வாறு இருக்கும்? அந்நிலையுற்றார் சந்த்ராம்!

பல இலட்சம் ரூபாய் போயிற்று. பல்லாயிர இயக்க நூல்கள் தீக்குயிரையாயின. இயக்க தஸ்தாவேஜுகளாவது மிஞ்சுமா! சாம்பல்! சாம்பல்! அந்தோ! ‘சந்த்ராமின் நிலை என்னும் ! அவர் உழைப்பு;பஞ்சாபில் அதாவது பாகிஸ்தானைச்சேர்ந்த லாகூரில் ஜாட்-பாட்-தோடக் மண்டல் மலையேறி போனாலும், அதை விடாது தொடர்ந்து கிழக்கு பஞ்சாபில் அதாவது இந்துஸ்தானைச் சேர்ந்த ஹோஷியார்பூரில் மண்டலைப் புதுப்பித்து இன்றும் விட்டதிலிருந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

பழைய இருபத்தைந்தாண்டு உழைப்பினை நினைவு கூர்ந்து ஒரு அரிய நூல் ஒன்றை வடித்தெடுத்தார். அதுவே முன்னைய கட்டுரைகளில் கூறிய ‘ஹமாரா சமாஜ்’. அந்நூல் இந்தியாவின் கவனத்தையே ஈர்த்தது. சந்த்ராமிற்கு அழியாப் புகழைக் தேடித் தந்தது என்றால் அது மிகையன்று. ‘ஹமாரா சமாஜ’ என்னும் நூலே சந்த்ராம்! சந்த்ராமே ‘ஹமாரா சமாஜ’! என்னும் நிலையில் இன்று காட்சி யளிக்கிறது.

சந்த்ராம் வழி !

துவக்கத்தில் முரண்டு பண்ணின சந்த்ராமின் சுற்றமும் நட்பும், சந்த்ராம் அவர்களின் இடைவிடா உழைப்பினையும், அவரது மேன்மையான கொள்கைகளையும், நாளடைவில் போற்றிப்புகழ்ந்து சந்த்ராமின் வழியைப் பின்பற்றலானார்கள் சாதி விட்டுச் சாதி திருமணம் செய்யவும், செய்து கொள்ளவும், தீண்டாமையை ஒழித்து பிறப்பில் உயர்வு தாழ்வு கொள்ளாமலும், வாழத் தலைப்பட்டார்கள். இந்தியா அவரை ஒரு சீர்திருத்தச் செம்மல், என ஏற்றிப் போற்றுகிறது.

இன்றைய அவரது நிலை!

இன்று சந்த்ராம் அவர்களுக்கு 70 வயது ஆகிறது. தொண்டு கிழவர் என்று கூற முடியவில்லை. முதுமைப் பருவம் புகுந்துள்ளார், ஆனால் கண்ணொளிதான் அவரை உட்கார வைத்து விட்டது. ‘காட்டராக்ட்’ (Cataract) என்னும் கண் வலியால் கவலை ஏற்றுள்ளார் கண்ணொளி இழந்துள்ளார். பற்கள் இல்லைதான்! பொக்கை வாய்ச் சிரிப்பைக் கண்டேன். அதன் எழிலில் சொக்கி நிற்கிறேன். அன்பின் உறைவிடம் அவர். அவரது அன்புப் பிணைப்பில் மூன்று நாட்கள் உறைந்து உள்ளம் விம்மி, இன்றும் அந்நிகழ்ச்சியால் மகிழ்ச்சிக் கடல் ஆடா நிற்கிறேன். வளர்க அவரது அன்பு! வெல்க அவரது உழைப்பு! வாழ்க அவர்.

அவருக்கு இன்று அவரது இரண்டாம் மனைவியான, அன்னை சுந்தர்பாய் அம்மாள் உறு துணையாக நின்று தொண்டாற்றி வருகிறார். இருவரும் ஒத்த அன்புடன் இணைபிரியாது வாழ்ந்து மகிழ்வுடன் இருக்கிறார்கள் என்பதனைக் கண்ணாரக் கண்டு களித்தேன், வாழ்க அவர்கள் !

முடிவுரை !

இதோடு இக்கட்டுரைத் தொடர் முடிவு உறுகிறது. எனக்கு இவ்வளவு உரிமையளித்த ஆசிரியர் திருவாளர் **என், வி. என்.** அவர்களுக்கு உளங்களிந்த நன்றி செலுத்துகிறேன், கட்டுரைகளைப் படித்த **‘திராவிடன்’** வாசகர்களாகிய உங்களுக்கு அன்பு கலந்த வணக்கம் சொல்லுகிறேன், எனது கட்டுரைகளை அச்சு கோர்த்து பிழைதிருத்தி எழில் ஏற்றிய **‘திராவிடன்’** அச்சுத் தொழிலாளர்களுக்கு எனது தலைவணக்கம் உரியதாகுக!

முற்றும்

ஆசிரியர் குறிப்பு—நண்பர் திருவேடம் அவர்கள் தீட்டி வந்துள்ள இவ்வரிய தொடர் கட்டுரையைப் பாராட்டி திராவிடன் வாசகர்களில் பெரும்பாலோர் மடல் தீட்டி தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர், அவைகளில் சிலவற்றை திராவிடனில் வெளியிட்டு யிருக்கிறோம், மற்றும் பலர்—இதனைப் புத்தக வடிவில் வெளிட வேண்டுமென்றும் வற்புறுத்தி வருகின்றனர். விரைவில் இதற்கானவை செய்ய எண்ணியுள்ளோம். நண்பர் திருவேடம் கட்டுரையின் வாயிலாக திராவிடன் பணியை சிறப்பித்தமைக்கு நமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்; திருவேடம் அவர்களின் இப்பணி திராவிடத்தின் எதிர்கால வாழ்வுக்கு பெருந்துணையாய் நிற்குமென்பதில் ஐயமில்லை. மீண்டும் அவருக்கு திராவிடன் சார்பிலும்—திராவிடன் வாசகர்கள் சார்பிலும் நமது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம். —ஆ.ர்

கற்பனை நாடகம்!

‘அமரர் கல்கி!’

ரெத்தினசாமி பப்பாய்

[தெய்வலோகத்தில் விஷ்ணு தன் மடியிலே லட்சுமியைக் கிடத்தி வேடிக்கை பேசுகிறார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டுலட்சுமிதேவி ஒருவேண்டுகோள்விடுக்கிருள்]

லட்சுமிதேவி : சுவாமி! நான் வெகு நாட்களாக ஒன்று உங்களிடம் கேட்க வேண்டுமென்று, ஆவலாய் இருக்கிறேன். அடியாளுக்கு அனுக்கிரகம் பண்ணுங்கள்.......

விஷ்ணு : (காதல் போதையில் நின்றவாறு) தாராளமாய்க் கேள்; தயங்காமல் தருகிறேன்.

லட் : நாம் இருவரும் இன்று பூலோகம் சென்று அங்கு நரர்கள் என்ன செய்கிருர்கள் என்று பார்த்துவரலாம் என்று எண்ணுகிறேன்.

வி : தேவி! நாம் பூலோகத்திற்குச் செல்வது யுகத்திற்கு ஒரு முறைதான். அதுவும் நரர்கள் கொட்டத்தை அடக்க 10-முறை சென்று அவர்கள் கொட்டம் அடக்கி கொலை செய்து வந்தோம். இனியும் யாராவது ஒரு நரன் நம்மை அவமதித்தால் நாம் உம்மையும் அழைத்துச் செல்வோம்.

[இச்சமயம் பூலோகத்திலிருந்து பெரிய சப்தம் கிளம்பி தேவலோகத்தில் உள்ளவர்களின் காதுகளைத் துளைக்கிறது.]

(பூலோகத்தைக் காட்டி) அதோ பாருங்கள், மக்கள் கூட்டம் கூட்டமாக கூச்சலிட்டுச் செல்கிருர்கள்.

வி : அவர்கள் ஏதோ திருவிழா கொண்டாடுகிருர்கள் போல் தெரிகிறது. நாம் அதிலெல்லாம் கலந்து கொண்டால் கௌரவக் குறைவாச்சே,

[மீண்டும் சப்தம் கேட்கிறது. அழுத கண்ணீரும் சிந்தியமூக்குமாய் சிலரும், தலையை மூடி முட்டாங்கிட்டுச்சிலரும் சாரை சாரையாகச் செல்கிருர்கள்.]

ஒரு வேளை நம்மிடம் முறையிட வருவார்கள் போல் தெரிகிறது.

ல : அப்படியெல்லாம் ஒன்றுமுல்லை. அங்கே ஏதோ எதிர்பாராதவிதமாக ஒன்று நடந்திருக்கிறது. அவசியம் போய்ப் பார்க்க வேண்டும்; காதலரே கருணை புரியுங்கள்.

[மேல் லோகத்தை விட்டு கீழ் லோகத்திற்கு வருகிருர்கள். தேங்கித் தேங்கி ஓடும் ஆறு தென்படுகிறது.]

ல : பார்த்தீர்களா ?

வி : நதியைத்தானே !

ல : போங்கள் ; உங்களுக்கு கிண்டல்தான் நதியை அல்ல. மக்கள் கூட்டத்தை.

[கூட்டத்தின் சப்தம் இப்போது தெளிவாகக் கேட்கிறது.]

“கூட்டம்” : வாழ்க அமரர் “கல்கி”! வாழ்க அமரர் “கல்கி”!

வி : (திடுக்கிட்டு) பிரியே! அது என்ன சப்தம்?

ல: வாழ்க அமரர் கல்கி என்று கூக்குரல் போடுகிருர்கள்.

[விஷ்ணு அப்படியே ஸ்தம்பித்து நிற்கிருர். முகம் மட்டும் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவர் போல் காட்டுகிறது.]

சுவாமி! ஏன் அவ்வாறு அசையா நிலையில் இருக்கிறீர்கள். மக்கள் ஏதாவது தவருகக் கூறுகிருர்களா? அல்லது நான்தான் தவறிழைத்தேனு? ஐயா! ஒன்றும் புரியவில்லையே! சுவாமி! ஏன் அப்படி ஸ்தம்பித்து நிற்கிறீர்கள். சொல்லுங்கள் பிரபு!

[ஒரு பெருமூச்சுவிட்டு தன்னிலைக்கு வந்து]

வி: லட்சுமி அந்த கூட்டத்தை உற்றுப் பார். மத்தியில் என்ன போகிறது ?

ல : ஒ-ரு பெட்டி. பாடைப் போல தெரிகிறது. அவர்கள் குரலிலிருந்து ‘கல்கி’தான் காலியாகியிருக்க வேண்டும் என்று யூகிக்கிறேன்.

வி : அப்படியென்ருல் அமரர் ‘கல்கி’ என்று ஏன் கத்துகிருர்கள் ?

ல ; அதுதானே எனக்கும் தெரியவில்லை. செத்த பிறகு அமரர் என்ருல் அர்த்தம் என்ன?......ம்........

[நன்ருக தலையை நாலா பக்கமும்கொட்டி பார்த்து சிந்தித்து விட்டு திடீரென்று ஏதோ எண்ணம் உதயமாவதுபோல்]

பிரபு! அவர்கள் ஏன் அமரர் என்று கத்தமாட்டார்கள் கண்டிப்பாய்க் கத்துவார்கள்.

வி: நீகூறுவது விளங்கவில்லையே!

ல ; கறுத்த ஆட்டைப்பார்த்து வெள்ளாடு — நச்சு நாகத்தைப் பார்த்து நல்ல பாம்பு—நொண்டிக்கு நடராசன், காசம் பிடித்தவனுக்கு ஆரோக்கியம் என்று பெயர் வைக்கும், தமிழ் இனத்தில் வந்தவர்கள்தானே இவர்களும், செத்தவனைப் பார்த்து அமரர் என்று சொல்வதில் ஆச்சரியம் என்ன பிரபு! ஹி...ஹி...

வி : போச்சு! போச்சு! எல்லாம் போச்சு!! என் எண்ணம் மண்ணுய்ப் போச்சு!!!

தமிழர்கள் சீர்குலைந்து தன் தாய்மொழியைச் சரியாக பேசவும், எழுதவும் தெரியாத தற்குறியாக இருக்கிருர்களே என்று அவர்கள்பால் இரக்கம் கொண்டல்லவா பிரம்மாவிடம் எவ்வளவோ அவர்களுக்காக சிபாரிசு செய்து அவர்கள் குறையை நீக்க வல்லவா பூலோகத்திற்கு ‘கல்கி’யை அனுப்பினேம்.

ல : ஆமாம்! அதனுல் என்ன குறை, தன் எழுத்துத் திறனுல் மக்களைத் தட்டி யெழுப்பி......

வி : அப்படி யென்ருல் தப்பிவித்தனமாய் இப்படி உளறிக் கொட்டுகிருர்களே ஏன்?

ல : பிரபோ! கோபத்தைக் குறைத்துக் குணத்துடன் கேளுங்கள், நான் பதில் கூறுகிறேன். அவர் புது மெருகு கொடுத்து தமிழ் நாட்டிலே தமிழைப் பிழைக்கச் செய்தார்! அவர் எழுதிக் குவித்திருக்கும் ஏடுகளுக்கு எண்ணிக்கையே இல்லை தேவா! 20-ஆண்டுகளுக்கதிகம் தமிழுக்காக சேவை செய்த செல்வன் அவர்! அவசரப்படாதீர்கள்.

வி : அவசப்படவில்லையடி. சித்தம் கலங்குகிறேன். அவன் காலத்தில் மக்கள்தமிழைக் கற்று பயன் அடைந்திருந்தால் ஏன் “அமரன்” என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது அலறுகிருர்கள்.

ல : ஒருவேளை அவ்வாறு கூறுபவர்கள் பாமரர்களாய் இருக்கலாம்.

வி : இல்லை! இல்லை! (கூட்டத்தினைக் காட்டி) அதோ பார் அத்தனையும் படித்தவர்கள். பாமரர்களாய் இருந்தால் பரவாயில்லை என்றிருப்பேன். படித்தவர்கள் — படித்துப் பட்டமும் பெற்றவர்கள்தான் அவ்வாறு அழைக்கிருர்கள்-

ல : தேவா! மன்னிக்கணும். அப்படி யென்ருல் அந்தப் பாடை ‘கல்கி’யின் பாடையல்ல என்று எண்ணுகிறேன்.

வி : ஆம். சிந்திக்க வேண்டிய விஷயம். ‘கல்கி’யின் பாடையாக இருக்க முடியாது. எதற்கும் எமதர்மனைக்கேட்டுப் பார்க்கிறேன்.

(எமதர்மன் அழைக்கப்படுகிருர்.)

எமன் : தேவருள் தேவா! திருவடி நோக்கிவர திருமுகம் கொடுத்து அனுப்பியதின் காரணம் யாது? அடியேன் அறியலாமா!

வி : எமதர்மரே! கேள்வி பட்டீரோ கேடுகெட்ட இந்த மாந்தர் செயலை? என் நெஞ்சுப் பொறுக்குதில்லையே!

எ : அஞ்சேல் அய்யனே! அஞ்சேல்! கேடுகெட்ட எவனையும் யாம் விட்டு வைத்ததில்லை, கட்டிப்பிடித்து வந்து கடுந்தண்டனை கொடுக்கசித்தமாய் இருக்கிறேன்.

வி : “கல்கி”க்கு அழைப்பு அனுப்பி விட்டீரோ ?

எ : அழைப்பா! ஹா...ஹா... இதற்குள் அஸ்தியை கரைத்து கரைத்த நீரும் அந்தர்த்தியானம் ஆகியிருக்குமே. அய்யனுக்கு அதில் சந்தேகம் யாதோ!.........

வி : அப்படி யென்ருல் பூலோகத்தில் ‘வாழ்க அமரர் கல்கி’ என்று கூக்குரலிடுகிருர்களே!

எ : (அப்படியா......ம் இருக்காதே!

வி : அப்படி யென்ருல் என்னைச் செவிடன் என்கிறீரா?

எ : நேற்று ‘கல்கி’யின் சடலத்தை கண்ணுலே கண்ட என்னைக் குருடன் என்கிறீரா ?

வி : ‘கல்கி’ சாகவில்லை (என்று தரையில் தன் காலை ஓங்கி ஒரு அடிஅடித்தார்) (தரையில் மிதித்தார்.)

எ : செத்து விட்டார்.

வி : எமனே! யாரிடம் “டூப்” அடிக்கிருய் என்பதை எண்ணிப் பேசு.

(தெய்வலோகத் தனைவரும், கையடிக்கிருர்கள். எமன் தலைகுனிகிருர்.)

எ : தேவா! சிறிது அவகாசங் கொடுங்கள். எதற்கும் என் செக்ரட்ரி சித்திரா புத்ரனை ஒரு வார்த்தை கேட்டு வருகிறேன்.

[கோபத்துடன் சரேலென்று போகிருன்.]

[தேவலோகமே அல்லோலப் பட்டுக் கொண்டிருக்கிறது]

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிடன் அலுவலகம்

சோமு அச்சகம்

1-12-55 முதல் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எனவே தோழர்கள் அதற்கேற்ப கடிதப் போக்குவரத்தும் தொடர்பும் கொள்ளவேண்டுகிறோம்

நிர்வாகி :

“திராவிடன்”

16/99 அம்மன் கோயில் தெரு

வால்டாக்ஸ் ரோட் போஸ்ட் : : சென்னை 1.

15

2—12—55 தொடர்ச்சி

காட்சி—34.

இடம்...சாவடி அருகில்

நிலைமை [கோகிலம் நடந்து வருகிருள். அவளைப் பார்த்ததும் பலவேசமும், வீரனும் முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக்கொண்டு ஓரத்திலே ஒதுங்குகின்றனர். அவள்—அவர்களைக் கடந்ததும்...]

பல: வீரா! இந்த நள்ளிரவிலும் கோகிலம்—ராஜத்துக்காக என்ன பாடு படுகிருள் பார்த்தாயா?

வீ: ராஜத்தின் வீட்டுக்குப் போவதும் அவளுக்கு ஆறுதல் சொல்லுவதுமாக இருந்த நிலையை மாற்றிக் கொண்டு இப்போது... காரியத்திலேயே இறங்கி விட்டாள். அதன் விளைவுதான் இப்போது...அவள் ஆற்றேரத்துக்குப் போய்வருவதும்;

ப: ஆற்றோரப்—நள்ளிரவில்! ...வீரா...நாளையும், கோகிலம்—மூர்த்தியை சந்தித்தால்...?

வீ: நிச்சயம் சந்திக்கத்தான் செய்வாள் இன்று மூர்த்தியும்—கோகிலமும் பேசிக்கொண்டதை பார்த்து வந்து என்னிடம் சொன்னவர்கள்—எந்த முடிவும் கூருமலேயே மூர்த்தி வேகமாகப் போய் விட்டதாகத்தான் கூறினர். இதை வைத்துப் பார்க்கும்போது...நாளை காலை ராஜம் தரும் புதிய திட்டத்தைத் தாங்கிக்கொண்டு மீண்டும் மூர்த்தி மீது படையெடுக்கத்தான் செய்வாள் கோகிலம்!

ப: அப்படி...நாளையும் கோகிலம் மூர்த்தியை சந்திக்கப் புறப்பட்டால்...கோகிலத்தின் ஆணவத்தை அடக்குவதற்கு நமக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்!

வீ: தூக்கிப் போய்விடலாமென்று கூறுகிருயா?

ப: அந்த 'பிருதிவி' வேலையை நமது 'சம்யுக்தை' யிடந்தான் காட்டவேண்டும்...இவள் சாதாரண தோழி...இவளை அடக்குவதற்கு அவ்வளவுபெரிய சாகசம் தேவையில்லை. ராஜம்—மலையிலேயிருக்கும் — தேன்! கோகிலம் மலரிலே யிருக்கும் தேன்! சிரமமும், அதிக சிந்தனையும் ராஜத்தைப் பற்றித்தான்! கோகிலம்—அந்த நீலப் புருவை நாளை வலையிலே சிக்கவைக்கிறேன் பார்!

(வீரனின் காதிலே ரகசியம் கூறுகிருன் பலவேசம்)

O

காட்சி—35

இடம்...மூர்த்தியின் வீடு

நிலைமை [தபால்காரன் கடிதத்தை கொடுத்து விட்டுப் போகிருன். பிரித்துப் படிக்கிருன் மூர்த்தி]

அன்புடையவரே!

நேச நெஞ்சகளிலே எப்படியோ விஷவிதைகள் தூவப்பட்டு விட்டன. சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஏற்படுத்திய விளைவுகள் பயங்கரமாகிக் கொண்டிருக்கிறது. என்னைப் பற்றிய கோபம் உங்களுக்கிருக்குமானுல்......அது நான் தங்களை சந்திக்கவில்லை என்ற ஒரே காரணத்தால் ஏற்பட்டதாகத்தானிருக்கும்!

......பல நாளாகவே சந்திக்க முடியவில்லைதான்...காரணம் பல முறையும் கூறியிருக்கிறேன். என்னை சுற்றிலும் வேலிகள். என் வாழ்வை வேதனைக் காடாக்க நினைத்தோரும்—இங்கே உண்டு. இப்போதே 'திருமணப் பேச்சு' உச்ச நிலைக்கு வந்து விட்டது. புயல் வீசுகின்ற இந்த நேரத்திலும் அமைதியாக இருந்தால்—ஆபத்து ஏற்பட ஏதுவாகிவிடும். ஆசைக் கோட்டைகள்! இளமைக் கனவுகள்...... அழிந்துதான் தீர வேண்டுமா?

என் இதயவீணையை இன்னொருவர் மீட்ட அனுமதியேன் வாழ்வு நெஞ்சத்துச் சித்திரமான உங்களுடனேயேதான்; அப்படி இல்லாதவரை...வாழ்வை சாவாகவே மதிப்பேன்

'காதல் பூங்கொடி'

(கடிதத்தைப்படித்த மூர்த்தி சிரித்துக்கொண்டே ... அந்தக் காகிதத்தை சுக்கு நூருகக் கிழித்து எறிந்ததும்...)

மூ: காதல்—பூங்கொடி ...கண்டவர் வீசும் வலையிலே விழும் காமக் குருபி, காதல் இலக்கியம் பேசுகிருள். இருட்டிலே திருட்டு வாழ்வு வாழும் இவளுக்கு திருமணம் ஒருகேடு! இன்னும் யாரின் வாழ்வுக்கு ஒரு கொடுவாளாகப் போகிருளோ! விஷ அம்பு எங்கோ பாயட்டும்...ஆனுல், நான் தப்பித்துக்கொண்டேன். அந்தப் பாவ நிழலின் சொந்தக்காரியின் கரம்பட்ட கடிதத்தைப் படித்தால்கூட நான் மாசுடைய வனுகிவிடுவேன். இனி அவளுக்கும் எனக்குமிருந்த 'வானவில்' உறவுக்கு வாழ்விலே ஊசி முனையளவு சம்மந்தமுமில்லையென்பதை இன்றே — இன்றிரவே விளக்கி விடுகிறேன். சூதுக்காரி வாழ்வின் சூனியக்காரி!

O

காட்சி—36-A

இடம்...திகம்பரர் மாளிகையின் பின் புறம்...இரவு நேரம்.

நிலைமை [வண்டு மனங்கொண்ட ஒரு பெண்ணின் விசித்திரக் கதையை பாட்டாகப் பாடி வருகிருன் மூர்த்தி. காதல் போர்வையை மூலதனமாக வைத்துக்கொண்டு மோசடி செய்யும் ஒரு மோகனுங்கியின் நிலை மூர்த்தியின் பாடலிலே படம் பிடிக்கப் படுகிறது.]

O

காட்சி—36-B

இடம்...மாளிகையின் உட்புறம் ராஜத்தின் தனி அறை

நிலைமை [இசை ஒலியை கவனமாகக் கேட்ட ராஜம் அது மூர்த்தியின் இதய ஒலிதான் என்பதைக் கேட்டதும் கட்டிலை விட்டு எழுந்து மாளிகையின் பின்புறம் பகுதிக்கு வருகிருள். மூர்த்தியின் பாடல் இப்போது ராஜத்தின் காதிலே தெளிவாக விழுந்தது, அந்தப் பாடலின் கருத்து அவள் நெஞ்சை அறுத்தது]

O

காட்சி—36 C

இடம்...மாளிகையின் தோட்டப் பகுதி

நிலைமை [நீண்ட மதில் சுவருக்கு வெளியே மூர்த்தி நின்று கொண்டிருக்கிருன். மதிலுக்கு உள்ளே மலர்முகவதி ராஜம் நிற்கிருள். அவர்களின் இதயங்களுக்கு முன்னே சந்தேக மதில் நீண்டிருப்பதைப்போல... இப்போது அவர்களுக்கு முன்னேயும் நீண்ட செங்கல் சுவர் காட்சி தந்தது. சுவரை ஒட்டியே நின்றுகொண்டு ராஜம் பேசத் துவங்குகிருள்]

ரா: அத்தான்!

(வெளியிலிருக்கும்—மூர்த்தி) :—மீண்டும் அப்படி அழைக்காதே!

ரா: தவருன எண்ணங்கள் நம்மை சாவுக்குழிக்கு அனுப்பி விட்டதே அத்தான். வாழ்விலும்—தாழ்விலும் பங்குகொள்வதாக ஆற்றோரத்திலே உறுதி எடுத்துக் கொண்டோமே..... அவைகளெல்லாம் வெற்றுரைகள்தானு?

மூ: வீம்புக்காரி! நீ சிரித்துப் பேசி நஞ்சைத் தந்தால் அதைத் தேன் என்று சுவைத்துவிட முட்டாளாக இல்லை நான். குகை இதயம் படைத்தவள் நீ...அங்கே ஒளிந்துகொண்டிருக்கும் கொடும் புலியைப் பார்த்து விட்டேன்! விலகிக்கொண்டேன்.

ரா: அத்தான்! இப்போதுதான் நீங்கள் பாடிவந்த பாட்டின் முழு அர்த்தமும் புரிகிறது! யாரோ கட்டிவிட்ட கதையை நம்பி என் நெஞ்சை அறுக்கிறீர்கள்' சபலத்துக்கும், சதிகாரர்களின் கதைக்கும் காது கொடுக்கும் உங்களை மனவலிவுடையோரென எண்ணி ஏமாந்தேன். ஆசை நினைவுகள் நெஞ்சிலே அலையோட்ட மிட உங்களையே என் வாழ்வின் திருவிளக்கென நம்பிக் கிடந்தேன். சூழ்நிலை தந்த தொல்லைகளையெல்லாம் மறந்துவிட்டு 'அத்தான்' என்று அழைத்ததும் அதிலே உலகத்தின் இன்பமே தேங்கிக் கிடப்பதாக கனவு கண்டு வந்தேன். அந்தத் தேன் வாழ்வுக்குப் புயலாகி விட்டீர்.

மூ: நீ புயலிலே சிக்கிச் சிதைந்தாலும், தென்றலிலே மிதந்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை! எண்ணங்களை—என்னைப் பற்றிய ஆசை நினைவுகளை மறந்துவிடு. சமயம் கிடைக்கும்போது — ஓலை எழுதி ஓலமிடாதே ... உனக்கும் எனக்கும் நடக்கும் இந்தப் பேச்சுதான் நமது கடைசி சந்திப்பு...... ஆற்றோரத்திலே ஆரம்பித்து ... இப்போது உன் வீட்டோரத்திலே முடிகிறது! வேடிக்கையான சந்திப்பு—விபரீதமான முடிவு!

ரா: நல்லது மூர்த்தி...வாழவைக்கக் காத்திருந்த உன்னால் சாகவைக்கவும் முடியுமென்பதைத் தெளிவாக்கிவிட்டாய் உனது விபரீத முடிவால்...ஒரு புதுமலர் காய்ந்து வீழ்ந்துவிடப் போகிறது. அன்பு பிறக்கும் நெஞ்சிலேயே விஷமும் தேங்கியிருக்கிறதென்பதை உணர்ந்து கொண்டேன். போய்வருகிறேன்—நீங்களும் போய்வாருங்கள். பொய்யுலகம் மாண்டு விட்டால் சந்திப்போம்.

(அடுத்த வாரம்)

மா. தங்கவேலர்

பொங்கல் வாழ்த்துக்கள்

சென்ற ஆண்டுபோல் முற்றிலும் புதுமை நிறைந்தது

போட்டோவிலேயே வாழ்த்துக்கள்

பெரியார், அறிஞர் அண்ணு, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணுநிதி, ஈ. வி. கே. சம்பத், சி. பி சிற்றரசு, கலைவாணர் N. S. கிருஷ்ணன், நடிகர் S. S ராஜேந்திரன் இன்னும் பல தலைவர்கள் போட்டோக்களும் கிடைக்கும்.

விலை 4 அணு

வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் கழிவு

ஜி. சிவானந்தம்

புத்தகம்—பத்திரிகை வியாபாரம்

22, பில்டர் பெட் ரோட் : வேலூர் வட ஆ.

ஏஜெண்டு தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

வணக்கம். நவம்பர் மாத நிலுவைத் தொகையையும் பொங்கல் மலருக்கென முன் பணமும்—விவரமும் டிசம்பர் 22-ந் தேதிக்குள் தவறாது அனுப்பி வைக்க வேண்டுமென்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம். அதற்கேற்ப உடனே ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நிர்வாகி "திராவிடன்"

திராவிடன்

சென்னை : 16-12-55 : வெள்ளி

இருவர் உள்ளம்!

தென்னாட்டில் தங்களுக்கிருக்கும் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்வதற்காக வட நாட்டவர் செய்து வரும் கொடுமை மிக்க செயல்கள் சமீப காலமாக அளவுமீறிச் செல்கின்றன. திராவிடத்தின் செல்வத்தை சுரண்டிக் கொழுக்கின்ற அவர்கள் எல்லாத் துறையிலும் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள விரும்புகின்றனர்.

ருசிகண்ட பூனை சும்மா இருக்காது—என்று சொல்வார்களே அதைப்போல் தென்னாட்டின் வளம் அவர்களது மனதை கிறுகிறுக்கச் செய்கிறது. என்றைக்கும் தாங்களே திராவிடத்தின் எசமானர்களா யிருந்து கொண்டு. திராவிட செல்வத்தைச் சுரண்ட வேண்டுமென்ற எண்ணம் வடநாட்டு ஆதிக்கக்காரர்களின் மனதில் ஆழப் படிந்துவிட்டிருக்கிறது. இந்த எண்ணத்தை நிலை நாட்டிக் கொள்வதற்காக வடவர்கள் எங்கெங்கு இடம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் தங்களது எண்ணத்தை மிகமிகத் "தைரியமாகவும் நாசுக்காகவும்" வெளியிட்டு வருகின்றனர்.

இந்தியா ஒரு துணைக்கண்டம் என்பதை மறந்துவிட்டு— "பாரதம்" என்ற புதுப்பெயர் கொடுத்து நாமெல்லாம் ஒரே நாட்டவர். நமக்குள் பிரிவினை மனப்பான்மை கூடாது, என்றெல்லாம் வடநாட்டுத் தலைவர்கள் ஆரம்பத்தில் பேசினர்.

இந்தக் கருத்தை நாம் பன்முறை எடுத்துக்கூறி கண்டித்து வந்தபோதெல்லாம் நம்மை "குறுகிய மனப்பான்மையினர்" என்று கூறி கேலி மொழி பேசி வந்தனர் இங்குள்ள தேசியத்தார்!

ரயில்வே நிலையங்களில் உச்சியில் ஏறி உட்கார்ந்திருக்கும் இந்தி மொழியினைக்காட்டி நாம் கண்டித்தபோதும் சில சில சப்பைக்கட்டுகளை, சமாதானம் என்ற பேரால் கூறிவந்தனர். இங்குள்ள காங்கிரஸ் தோழர்கள்!

இந்தி மொழியால் தமிழ் கெடாது, இந்தி கற்றுக்கொள்வதால் தமிழுக்கு ஆபத்து ஏற்படாது! என்றெல்லாம் இங்குள்ள சில பாரத புத்திரர்கள் அவ்வப்போது கூறிவந்தனர்.

இவர்கள் அத்தனைபேரது கருத்திற்கும் சிறிதுகூட மதிப்பளிக்காத வகையில் வடநாட்டுத் தலைவர்கள் இன்னும் தீவிரமாக இந்தி மொழியை தென்னகத்தில்—தமிழகத்தில் புகுத்த விரும்புகின்றனர்.

வடநாட்டில் இருக்கின்ற இந்திமொழி ஆதிக்கக்காரர்களில் தலை சிறந்து விளங்கும் முன்ஷி அவர்கள் சமீபத்தில் பேசிய பேச்சையும், அண்மையில் வெளிவந்த, குடியரசுத் தலைவர் இராஜேந்திரபிரசாத் அவர்களின் உத்திரவையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, வடவர்க்குள்ள மொழி ஆதிக்கத்தின் போக்கு நன்கு வெளிப்படுகிறது.

அலாகாபாத்திலுள்ள சாகித்திய சம்மேளன பட்டமளிப்பு விழாவில் பேசவந்த உத்தரபிரதேச கவர்னர் முன்ஷி, தம்முடைய அளவுகடந்த இந்திமொழி வெறியைக் கக்கியிருக்கிறார்.

"இந்தியாவின் பெருமையும், அதன் கலாச்சாரப் புது இணைப்பும், எதிர்காலத்தில் இந்தி மொழி ஒரு தேசிய மொழியாக வளருவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது"—முன்ஷியின் முணு முணுப்பு இதுதான்!

இந்தி மொழி தேசிய மொழியாக வளர்ந்தால்தான் இந்தியாவின் பெருமை வளருமாம். என்ன விசித்திரமான எண்ணம்! முன்ஷி அவர்களே ஒப்புக்கொள்கிறார் இப்போது வடக்குக்கும் தெற்குக்கும் கலாச்சார இணைப்பு இல்லை என்பதை! இது அவரது பேச்சே தெள்ளத் தெளிய எடுத்துக் கூறுகிறது. இந்தி தேசிய மொழியானால்தான் இந்தியாவில் ஒரு புதிய கலாச்சார இணைப்பு ஏற்படும்—கலாச்சார இணைப்பு ஏற்பட்டால்தான் இந்தியாவின் ஒற்றுமை ஏற்படும் — இந்தியாவின் ஒற்றுமை ஏற்பட்டால்தான் வடவர்கள் தென்னகத்தை சுலபத்தில் சுரண்ட முடியும் என்பதை கவர்னர் முன்ஷியின் பேச்சு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இது மட்டுமல்ல. முன்ஷி கூறுகின்ற புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்காக அவர் மேலும் பல யோசனைகளைக் கூறுகிறார்.

"இந்தி வளருவதற்கு இந்தியா முழுமையிலும், இந்தி மொழியே உயர்தரக் கல்வி போதிக்கும் போதனா மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படும். மொழிவெறி தொடர்ந்து தலைதூக்கிக் கொண்டிருக்கும்."—என்கிறார்!

இந்தியாவின் பெருமையும், புதிய கலாச்சார இணைப்பும் ஏற்படவேண்டுமானால் இந்தி தேசிய மொழியாகவேண்டும்! இந்தி தேசிய மொழியாக வேண்டுமானால் இந்தியிலேயே எல்லா பாடங்களையும் போதிக்கவேண்டும், இல்லாவிட்டால் மொழிவெறி தொடர்ந்து தலைதூக்கிக்கொண்டிருக்குமாம்!

மொழிவெறி பிடித்தலைகின்றவர்கள் யார் என்பது கவர்னர் முன்ஷிக்குத் தெரியாத தொன்றல்ல! காலச்சார இணைப்பிற்காக இந்தி தேசிய மொழியாக வேண்டும் என்று கூறுகின்ற முன்ஷி, மொழி வெறியரா அன்றி தாய்மொழி வளரவேண்டும் என்று கூறுபவர்கள் மொழி வெறியர்களா?

இவ்வளவும் கூறுகின்ற முன்ஷி அவர்கள், மற்ற மொழிகளை போதனா மொழியாக வளர்க்கக்கூடாது என்றும் கொக்கரிக்கிறார்!

"உயர்தரக் கல்வி தருவதற்கென பல மொழிகளை போதனா மொழிகளாக வளர்ப்பதில், நமது ஆற்றல்கள் அனைத்தையும் வீணாக்குவோமானால், முடிவில் நாம் எந்த ஒரு மொழியையும் முன்னேற்ற முடியாது போய்விடும்; அதிலும் ஒரு ராஷ்டிர பாஷையை வளர்க்கமுடியாது போய்விடும்"—முன்ஷியின் வாதம்!

கல்லூரிகளில் தமிழில் பாடங்களைப் போதிக்கவேண்டும் என்று கூறி வருகின்ற இந்நேரத்தில், இந்தியில்தான் பாடங்களைப் போதிக்க வேண்டும் என்று முன்ஷி போன்றோர் கூறுவது வடவரது மொழி வெறியை நாம் புரிந்து கொள்ள ஏதுவாகிறது.

அந்தந்த வட்டாரத்தில் மக்கள் எந்த மொழி பேசுகின்றனரோ, அந்த மொழியே பாடத்திட்ட மொழியாகவும். இன்னும் சொல்லப்போனால் ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பரவிவருகின்ற இந்நாளில், முன்ஷி போன்றோர் இந்தியா முழுமைக்கும் ஒரே மொழிபோதும் என்று கூறுவது அவர்களது ஏகாதிபத்திய ஆசையைத்தான் மற்ற பகுதியினருக்கு விளக்கவைக்கிறது.

அலகாபாத்தில் இருந்து கொண்டு முன்ஷிதான் இவ்விதம் பேசுகின்றார் என்றால், இந்தியக் குடியரசுத்தலைவர் இராஜேந்திரபிரசாத் அவர்கள் ஒரு புது உத்திரவு பிறப்பித்துள்ளார். இனிமேல் இந்தியில்தான் மத்திய அரசாங்க அலுவல்கள் நடைபெறுமாம்! ஆங்கிலத்துடன் இந்தியும் அரசாங்க அலுவல்களுக்குப் பயன்படுத்தப்படுமாம்.

பொதுமக்களுடன் கடிதப் போக்குவரத்து, நிர்வாக அறிக்கைகள், மக்கள் சபைக்கான அறிக்கைகள், சர்க்கார் தீர்மானங்கள், சட்டங்கள், இந்தியாவின் வெளிநாட்டு அதிகாரிகள்-தூதுவர்கள், சர்வதேச நிறுவனங்கள்-போன்றவற்றின் தொடர்புகளுக்காக இனி ஆங்கிலத்துடன் இந்தியை உபயோகிப்பார்களாம்!

மத்திய சர்க்காருக்கு இந்த வசதிகளை யளித்து, உத்தரவு போடுகிறார் குடியரசுத் தலைவர்!

இந்தியினால் உங்கள் மொழி கெடாது—தமிழர்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை — என்று கூறின குடியரசுத் தலைவர், இனி மத்திய சர்க்காரின் தீர்மானங்களும் சட்டங்களும் இந்தியிலேயே தயாரித்து உங்களுக்கு அனுப்பப்படும் என்று கூறுகிறார்! கவர்னர் முன்ஷி இந்தியை மட்டும் அகில இந்தியாவிற்கும் போதனா மொழியாக்க வேண்டும் என்று கூறுகிறார்.

குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் ஆங்கிலத்துக்கு துணையாக இந்தி மொழியும் ஆட்சி மொழியாக இருக்கும் என்று உத்தரவு போடுகிறார்!

இருவருமே வடநாட்டுத் தலைவர்கள். ஒருவர் மாகாண கவர்னர் மற்றவர் நம்மை ஆண்டுகொண்டிருக்கும் குடியரசுத் தலைவர், இருவரது எண்ணமும் இந்தி மொழியை திணிக்க வேண்டும் என்பதே!

அண்மையிலே தீபாவளி கொண்டாடுவதற்காக சென்னை வந்திருந்த குடியரசுத் தலைவர், இந்தி மொழியால் தமிழுக்கு கேடு வராது என்று கூறிச்சென்றார். இன்று அங்கிருந்தபடியே உத்திரவு போடுகிறார்! இந்திமொழிக்கு "புதிய அந்தஸ்து" கொடுக்கிறார்.

குடியரசுத் தலைவர் இராசேந்திரர் "ஆட்சி" என்னும் புதிய அந்தஸ்தை கொடுக்கிறா-அதே நேரத்தில் கவர்னர் முன்ஷியும் "போதனா மொழி" என்ற கித்தாப்பை இந்தி மொழிக்கு அளிக்க எண்ணுகிறார்.

வடவர்கள், ஆதிக்கப் பிடிப்புடன் வளர்க்கிறார்கள் இந்தி மொழியை! தங்களிடம் பதவி இருக்கிறது என்ற காரணத்தால்

அந்த மொழிக்கு பருவத்திற்கு மீறிய வளர்ச்சியை அளிக்கின்றனர் வடநாட்டுத் தலைவர்கள்! இதனுடைய விளைவை அவர்கள் இப்போது தெரிந்துகொள்ள முடியாதுதான்! அந்த அளவுக்கு மொழி ஆதிக்கம் மண்டைக் கேறிவிட்டது!

இவ்வளவு பேராசை கொண்டுள்ள இந்தி, ஆட்சி மொழியாகவோ—அன்றி தேசிய மொழியாகவோ ஆகும் தகுதி படைத்ததா எனில், இல்லை யென்பதை கவர்னர் முன்ஷி அவர்கள் தன் வாயாலேயே ஒப்புக் கொள்கிறார்.

“சவமொழியிலிருந்து பெரும் பகுதிகளை கிரகித்துக் கொள்ளாவிட்டால் இந்தி ஒரு “ராஷ்டிரபாஷை”யாக விளங்க முடியாது”

சவமொழி என்பது செத்து விட்ட சமஸ்கிருத மொழியாகும். அதிலிருந்து நிறைய பகுதிகளை கிரகித்துக்கொண்ட பின்னர்தான் இந்திக்கு ஆட்சி மொழியாகும் தகுதி ஓரளவு கிடைக்கும். சமஸ்கிருதக் கலப்பின்றி இந்தி தேசிய மொழியாகிவிட முடியாது!

பிறமொழிகளின் உதவியினால் மட்டுமே ஆட்சிமொழியாகும் தகுதி படைத்த இந்திதான்-மற்ற தென்னாட்டு மொழிகளின்மீது ஆதிக்கம் கொள்ள விரும்புகிறது! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய தமிழ் மொழியின்மீது ஆதிக்கம் கொள்ள எண்ணுகிறது.

இதிலிருந்து பார்த்தால் தெரியும். வடவர்கள் தென்னகத்தை —தமிழகத்தை எவ்வளவு கிள்ளுக்கீரையாக மதிக்கிறார்கள் என்பது!

இப்படி மற்ற மொழிகளை அழித்துவிட்டு, சமஸ்கிருதத்தில் இருந்து நிறைய பகுதிகளை கிரகித்துக்கொண்டு இந்தி போதனா மொழியாகவேண்டும், என்று கூறுகிற இதே முன்ஷிதான், தமிழகத்தில் பஞ்சம் தலைவிரித்தாடியபோது புளியங்கொட்டையைச் சாப்பிடச்சொன்ன உணவு மந்திரியாக இருந்தார் என்பதை தமிழகம் இவ்வளவு சீக்கிரம் மறந்துவிடாது!

இருபெரும் வடநாட்டுத் தலைவர்கள் தங்களது உள்ளத்தைத் திறந்து காட்டுகின்றனர். தென்னகத்தின் மீது — தமிழகத்தின் மீது துளியும் எங்களுக்கு அக்கறையில்லை என்பதை மறைமுகமாகக் கூறுகின்றனர். இதுநாள் வரையில் ஏக இந்தியா பேசி வந்த நம் நாட்டுத் தேசியத்தார், இனியாகிலும் வடவரின் ஆதிக்க எண்ணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

வடவர்கள் தங்களது பிடிப்பை நிலை நிறுத்த எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதற்கு முன்ஷியின் சொற்பொழிவு மேலும் ஒரு எடுத்துக்காட்டு.

ஏகாதிபத்திய வெறிபிடித் தலைகின்ற வடவரது மொழிவெறியைத் தகர்த்தெறிய தென்னாட்டவர் என்றும் தயங்கியதில்லை, இன்னும் தயங்கப்போவதில்லை என்பதை முன்ஷி போன்றவர்கள் விரைவில் புரிந்து கொள்ளப் போவது உறுதி உறுதி. உறுதி.

புயல் நிவாரணப் பணி

அண்மையில் வீசிய கடும்புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவி அளிக்க வேண்டி சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் அவர்கள் மேற்கொண்டுள்ள உண்மையும் அக்கறையுமான தீவிர முயற்சிகளைக் கண்டு தமிழர்களனைவரும், வெள்ளக்கொடுமையால் வாழ்விழந்து தவிப்பர்களும் ஆறுதல் அடைவது மட்டுமல்ல மனமார பாராட்டவும் செய்வர்.

சென்னை முதலமைச்சரின் இத்தொண்டுக்குத் துணையாய் நின்று நிவாரணப் பணியை மிக விரைவில் நிறைவேற்ற—திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளரின் அறிக்கைக்கேற்ப நாடெங்கிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகளும் குறிப்பாக தஞ்சை, திருச்சி, மதுரை, ராமநாதபுர மாவட்டக் கிளைகளும் அதன் செயலாளர்களும், தலைமை நிலையமும் கடமை யுணர்ச்சியுடன் ஆற்றிவரும் தொண்டினையும் நாடறிந்ததே.

அதுபோலவே திராவிடர் கழகம், காங்கிரஸ், சோஷலிஸ்ட், கம்யூனிஸ்டு, கட்சியினரும் தனிப்பட்ட நிறுவனங்களும், சென்னை கார்பொரேஷன் உள்ளிட்ட பலநகரசபைகளும் தொழில்—வர்த்தக நிலையங்களும் நிவாரணப்பணிக்கு உதவி செய்துள்ளன.

புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மேலும் ஆறுதல் அடையக் கூடிய வகையில் கலைத்துறையில் ஈடுபட்டுள்ள அனைவரும்—கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்-மதுரம், நடிப்பு-இசைப்புலவர் கே. ஆர். ராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், டி. எஸ். பாலையா, டி. கே. எஸ். சகோதரர்கள் சிவாஜி கணேசன், ஸ்ரீராம், டி. ஆர் ராஜகுமாரி, சாவித்திரி. லலிதா, பத்மினி, பானுமதி ஆகியோர் ஆயிரக்கணக்கான ரூபாய்களும், மற்றுமுள்ள நடிகர்கள் ஸ்டுடியோ நிர்வாகிகள் படத்தயாரிப்பாளர்கள் தங்களால் இயன்ற அளவு நன்கொடை அளித்து மேலும் நிதியைத் திரட்டி வருகின்றனர். மலேயா—இலங்கையிலுள்ள தமிழர்கள் ஆவன செய்து வருகின்றனர்.

ஆக புயல்கொடுமையினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை ஓரளவாவது நிலைபெறச்செய்ய நம்நாட்டிலுள்ள அனைவரும் ஒருமித்து அளிக்கும் பேருதவியைத் துணையாய்க் கொண்டு சென்னை மாநில முதலமைச்சரும் அரசியலாரும் நிவாரணப் பணியை மிக விரைவில் இனிது முடிக்க வேண்டுகிறோம்.

திறந்த மடல்

இந்தியப் பிரதமர் நேரு அவர்களுக்கு,

வணக்கம். மாகாண வெறி ஓரளவுகூட இல்லாத பரந்த நோக்கம் கொண்ட பத்தரைமாத்துத் தங்கம் என போற்றப்படும் தங்களுக்குத் தீட்டும் இம்மடலில் கண்டுள்ள செய்தியை நடுநிலையிலிருந்து படித்துணர வேண்டுகிறேன்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள புயல் கொடுமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யத் தாங்கள் $1\frac{1}{2}$-லட்ச ரூபாயை சென்னை சர்க்காருக்கு அனுப்பி, மேலும் தேவையானாலும் அனுப்புகிறேன் என்று ‘அபயம்’ அளித்திருக் கிறீர்கள்! மூன்று ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட புயல் கொடுமையின்போது இருந்த தங்களின் போக்கும், இப்போது $1\frac{1}{2}$ லட்ச ரூபாய் அனுப்பிவைத்துள்ள செயலும் —ஓரளவு ஆச்சரியப்படக் கூடியதுதான்.

தாங்களோ அல்லது ஆட்சி பீடமோ அளிக்கும் இந்த பொருளுதவியினாலேயே, புயல் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களின்வாழ்வு நிறைவுபெற்றுவிடும் என்று தமிழகம் நம்பியிருக்கவில்லை.

ஏனெனில், இயற்கைக் கோளாறினால் ஏற்பட்ட இந்தக் கொடுமை ஏதோ மூன்றாண்டுக்கு ஒரு முறை-பத்தாண்டுக்கு ஒரு முறை என்பதாக தென்னாட்டு மக்களைத் திகைத்திடச் செய்கிறது. ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளாக தங்களின் ஆட்சிமுறையால் தென்னாட்டு மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகளில் தொடர்ந்து புயல் வீசப் பட்டு வருகிறது.

எனவே புயல் நிவாரண நிதிக்காக தாங்கள் அளித்த ஒன்றரை லட்ச ரூபாயைக் கண்டு அரசியல் யூகம் படைத்த எவரும் பூரிப்படைந்துவிட முடியாது.

ஏனெனில், கடந்த எட்டு திங்களுக்குமுன் உத்திரபிரதேசத்தில் வெள்ளக் கொடுமையால் மக்கள் தவித்தபோது தாங்கள், உடனடியாக உத்திர பிரதேசத்திற்குப் பறந்துசென்று நாலைந்து நாள் அங்கேயே முகாம் அடித்து பெரும் நிதி திரட்டினீர்; நிவாரணப் பணியில் தீவிரமாக ஈடுபட்டீர். ஆனால், தமிழகத்தையே நடுங்கக்கூடிய வகையில் ஏற்பட்டுள்ள புயல்கொடுமையை நேரில்கண்டு ஆறுதல் கூற தங்களுக்கு மனவளம்உண்டாகவில்லை.

அதிலும் தமிழகத்தின் அடுத்த மாநிலங்களிலேயே - ஐதராபாத்-கர்னூல் ஆகிய இடங்களில் இரண்டு நாட்களாகத் தங்கியிருந்துங்கூட தமிழகத்திற்கு வர தங்களின் பரந்தநோக்கம் இடந்தரக் காணோம். உத்திரபிரதேசத்திற்கு மட்டும்-அதுவும் டில்லியிலிருந்தே பறந்து சென்றிருக்கிறீர்கள்.

இவ்வாறு நாம் கேட்டால், இதெல்லாம் குறுகிய மனப்பான்மை-இதுபோன்ற மாகாண வெறி கூடாது என்று உபதேசம் செய்ய தாங்கள் மட்டுமல்ல, எங்கள் தமிழகத்திலிருக்கும் சில அவசரக் குடுக்கைகளும் வரிந்து கட்டி நிற்பர்.

உத்திர பிரதேசத்தில் சர்க்கார் கிடையாது—அம்மாநிலம் மத்திய சர்க்காரின் நேரடியான ஆட்சியின்கீழ் இருந்து வருகிறதுஎன்று தாங்கள் கூறிவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகப் பெரிய—வலுமிக்க சர்க்காரைக்கொண்ட மாநிலம் உத்திரப்பிரதேசமே யாகும். அவ்வாறிருந்தும் தாங்கள் உத்திர பிரதேசத்திற்கு ஓடோடிச் சென்றிருக்கிறீர், ஆனால் தமிழகத்தின் மீது அந்த “பாசம்” ஏற்படவில்லை.

பண்டிதரே. உங்களின் இந்த மனப்பான்மையை புயல் சேதாரம் போன்ற பிரச்னையில் மட்டுமல்ல தென்னாட்டினர் கண்டு வருவது; அகதிகள்—வெளிநாடுகளில் அவதியுற்றுவரும் இந்திய மக்களின் பிரச்னைகளிலும் தங்கள் ஆட்சி, தென்னாட்டு மக்கள் விஷயத்தில் ஓர வஞ்சனையுடன் தான் நடந்து வருகிறது.

பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய அகதிகள் பிரச்னைக்காக 500 கோடி ரூபாய் வரை செலவழித்து, உடனுக்குடன் ஆவன செய்து வரும் மத்திய சர்க்கார் இலங்கையில் வாழும் தமிழர்கள் பிரச்னையில் எவ்வாறு நடந்து வருகிறது என்பதை இலங்கைச் சர்க்காரே அறியும்! இந்த லட்சணத்தில் நேரு—மாகாணப்பற்று சிறிதும் இல்லாத மகாமேரு என்ற கித்தாப்பு வேறு!

உத்திரப்பிரதேசம் உங்களின் சொந்த மாநில மாதலாலே உங்களின் உள்ளம் துடிக்கிறது. ஆனால் அதைவிட பெரும் கொடுமைகளுக்கு ஆளாகி தவிக்கும் தமிழர்களிடம் அந்த பாசம் காணோம். ஓட்டு வேட்டையாடவும்மற்றும் எதெதெற்கோ தமிழகத்திற்கு ஓடிவரும்தாங்கள் இந்த முக்கிய நேரத்தில் அதுவும் அடுத்த மாநிலத்தில் பவனிவந்த நேரத்தில் சில மணி நேரங்களை தமிழகத்திற்காக ஒதுக்க உங்கள் பரந்த மனம் இடமளிக்கவில்லை!

கனம். நேரு பண்டிதர் அவர்களே, ஆசிய ஜோதி என்று புகழப்படும் தங்களிடமே இந்த புத்தி யென்றால்,— வடநாட்டிலுள்ள மற்ற எந்தத் தலைவர்களிடம்தான் தென்னாட்டவர்கள் நம்பிக்கை கொள்ள முடியும். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள், எனது இம் மடலில் நியாயமிருப்பின் எதிர்காலத்திலாகிலும் தமிழர்களின் நல்வாழ்வுக்கு ஆவன செய்யுங்கள். சிரமம் மன்னிக்கவும்.

அன்புள்ள

—கூத்தரசன்

வருந்துகிறோம்

குடந்தைத் தி. மு. கழக செயற்குழு உறுப்பினரும், திராவிட இயக்கத்தின் நீண்டகால ஊழியருமான தோழர். வி. பராங்குசம் அவர்களின் தாயார் வேதவல்லி அம்மையார் 6–12–55 அன்று இயற்கை யெய்திய செய்தி அறிந்து மிக வருந்துவதுடன் அவருக்கு நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

கேள்வி? பதில்.

அஞ்சா நெஞ்சன்

●

எம். குமாரசாமி, மதுரை

கே : அஞ்சா நெஞ்சரே, காமராச நாடார்-கரையாளர் கோஷ்டிச் சண்டை எப்படி முடியும் ?

ப : தோழரே அடுத்த வீட்டுச் சண்டையைப்பற்றி என்னைக் கேட்கிறீரே, இது நியாயமா ? காமராசர்—கரையாளர் கோஷ்டி வேறுபாடு, குடும்பத் தகராறு போன்றதே. என்னைப்பொறுத்தவரை அவர்களிடையே ஏற்பட்டுள்ள தாசக் கூறப்படும் வேறுபாடு யாதொரு அசம்பாவிதமுமின்றிவிரைவில் இனிது முடியவேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

ஃ

சி. கண்ணப்பன், விழுப்புரம்

கே : அஞ்சா நெஞ்சனே, அந்த எல்லாம் வல்ல ஆண்டவன் இருக்கிறனே, அவனன்றி ஒரு அணுவும் அசையாது என்பதை ஒப்புக்கொள்ள உம்மைப் போன்ற சுமகட்சிக்காரர்கள் என்னதான் மறுத்தாலும், மற்றவர்கள் எல்லாம் ஒப்புக் கொள்வார்கள், தெரிகிறதா ?

ப : அடேயப்பா, கேள்வி கேட்பதிலேயே இவ்வளவு அலட்டலா ! நீங்கள் ஆச்சாரியார் கோஷ்டியைச் சேர்ந்தவர் போலிருக்கிறது. ஏனெனில். அண்மையில் வீசிய கடும் புயலுக்காக, ஆச்சாரியார் விடுத்துள்ள செய்தி ஒன்றில் "இதெல்லாம் ஆண்டவன் செயல்" என்று குறிப்பிட்டு வேதாரண்யத்திலுள்ள சர்தார் வேதரத்தினம் அவர்களுக்கு ஆறுதல் கூறியிருக்கிறார். ஆச்சாரியார் குறிப்பிடும் அந்த ஆண்டவனுக்கு எவ்வளவு மட்டமான எண்ணம் பார்த்தீர்களா ! ஆயிரம் பேர்களுக்கு மேல் உயிரைப் பலிவாங்கி, கோடிக்கணக்கான பொருள்களைச் சேதப்படுத்தியதும். அந்த "எல்லாம் வல்ல ஆண்டவன்தானே" ! இதைத் தாங்கள் ஒப்புக்கொள்வதாயிருந்தால், ஆண்டவனையே பழிக்கு ஆளாக்குகிறீர்கள் அல்லவா ! தோழரே நன்றாக சிந்தித்து நீங்களே முடிவுக்கு வாருங்கள்.

வெளிக்கு போகும்போது வெல்லரிக்காயை சாப்பிடாதீர் என்று புத்தி சொன்னால், நான் இன்னும் எப்படி எப்படியோ தின்பேன் நீ யாரடா அதைத் தடுக்க—என்னை மறுக்க என்று சீறி விழுந்தாலும் ஒரு பேர்வழி ! அந்த மாடலிலே உங்கள் ஆண்டவன் நம்பிக்கையும் இருக்கிறது.

உம்மைச்சொல்லி என்ன பயன், ஆச்சாரியாருக்கே இன்னும் அந்த புத்தி போகவில்லையே, என் செய்வது; தொட்டதற்கெல்லாம் ஆண்டவனை இழுத்து வைத்து அவருக்கு கெட்டபெயரை உண்டாக்கும் உங்களைப் போன்றவர்களுக்குப் பெயர் "ஆஸ்திகர்கள்!" எவ்வளவு லட்சணம்!

ஃ

சி நந்தன், நகிரி.

கே : 1952-ம் ஆண்டு அடித்த புயலுக்கு உதவிசெய்த தி. மு. கழகம், அண்மையில் வீசிய புயலுக்கு உதவி செய்யுமா ?

ப : தோழரே, தாங்கள் தூங்குவது போல பாசாங்கு செய்வதில் சமர்த்தரோ !

ஃ

இ. இளவரசன், கடலூர்,

கே : (1) தியாகத்திற்கு விலை கொடுக்க முடியுமா ?

ப : தியாகத்தை விலைக்கு விற்பவர்கள் இருப்பார்களானால், அதை வாங்கவும் சில பேர்வழிகள் இருக்கத்தானே செய்வர். இதற்கு எடுத்துக்காட்டாக இன்றைய காங்கிரஸ் கூடாரம்தான் காட்சியளிக்கிறதே !

கே: (2) காந்தியத்தின் கொள்கையை நேரு கடைபிடிக்கிறாரா ?

ப : அப்படி கடைப்பிடித்தாலும் சரியோ—தவறோ ஒரு திட்டவட்டமான கொள்கையாகிலும் நேரு பண்டிதருக்கு இருக்கிறது என பெருமைப் படலாம், ஆனால் பண்டிதரோ பஞ்சசீலக் கொள்கையில் மூழ்கி யிருக்கிறாரே !

ஃ

டி. கோபாலன். மண்ணடி

கே : உங்கள் தி. மு. கழகம் அடிக்கடி சிறப்புக் கூட்டம் நடத்துகிறதே ஏன் ?

ப : அதைத்தான் அந்தந்த சிறப்புக் கூட்டங்களின் விளம்பரங்களில் காணுகின்றீரே, அது உமக்குப் புரியவில்லையோ !

ஃ

எம். கே. நரசிம்மன், கோவை

கே : எங்கள் ராஜாஜியின் 76-வது ஜன்ம விழாவைப்பற்றி உங்கள் எண்ணம் என்ன ?

ப : தோழரே—இதென்ன உங்கள் கேள்வியிலே புதிய குழப்பம் காட்சியளிக்கிறதே ! ஜென்ம விழா என்பதை பிறந்த நாள் விழா என்று எழுதக் கூடாதா ? ஒருக்கால் இது உங்கள் ஜென்ம வாசனை போலும் அகிருக்கட்டும். திரு. ஆச்சாரியார் அவர்களுக்கும், (யான் சார்ந்துள்ள கட்சியின் கொள்கைக் கேற்ப) எனக்கும் அரசியலில் வேறுபாடுகளிருப்பினும், அவர் நூறாண்டு நிறைவு பெற்று இனிது வாழவேண்டும் என்பதே எனது மனப்பூர்வமான எண்ணமாகும்.

●

பம்பாயில்

கவிஞர் கண்ணதாசன்

சுற்றுப்பயணம் நிகழ்ச்சிகள்

●

டிச. 24 ... பம்பாய் வருகை
25 ... ஆமதாபாத் நிகழ்ச்சி
26 ... பம்பாயில் ஓய்வு
27 ... கோரேகான்
28 ... கொலபா
29 ... அந்தேரி
30 ... தாராவி
31 ... பொது உறுப்பினர் கூட்டம்

ஜன. 1 ... மாதுங்கா.

அன்பழகன் பிறப்பு

ஆமதாபாத் தோழர் டி. முத்துக்கிருட்டிணன் அவர்கள் துணைவியார் ரங்கநாயகி அம்மையாருக்கு 30-11-55 அன்று ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும நலம்; குழந்தைக்கு 'அன்பழகன்' எனப் பெயர் சூட்டப்பட்டது அதன் நினைவாக திராவிடன் இதழுக்கு ரூ 1—0—0 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. வரப் பெற்றோம். நன்றி-நிர்வாகி.

முத்துலட்சுமி—சண்முகம்

திராவிடன் அலுவலகத் தோழர் முத்துவேல் அவர்களின் தமக்கை தோழியர் முத்துலட்சுமி—சண்முகம் அம்மையாருக்கு, 4-12-55 ஞாயிறன்று மாலை ஒரு பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம். இதன் நினைவாக ரூ. 1 வரப்பெற்றோம், நன்றி—நிர்வாகி.

வடசென்னை புயல் நிவாரண நிதிக் குழுவின் தீவிர பணி.

●

தமிழகத்தின் தென் பகுதியில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண மளிக்க வேண்டி வடசென்னை பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிதிக் குழுவினர் 11—12—55 ஞாயிறன்று முக்கிய வீதி வழியேசென்று நிதிதிரட்டினர். பொது மக்கள் அனைவரும் பெரும் பங்கேற்று நிதி திரட்டும் பணியில் மிக்க ஆர்வங் காட்டினர். நிமிடத்திற்கு நிமிடம் அரிசி மூட்டை, பருப்பு மூட்டைகளும் நிதி சேர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த வண்டியில் குவிந்த வண்ணமிருந்தன நிதியாகத் தரப்பட்டகோழி ஒன்று ஏலம் விடப்பட்டதில் ரூ 42-க்கு வாங்கப்பட்டது. நிதி திரட்டும் பணியில் திருவாளர்கள் எம், மாயாண்டி அவர்கள் தலைமையில், எம், பி. எஸ், இரத்தினசாமி. வி. சங்கரன், க கணேசன், வி, சுந்தரமூர்த்தி, எஸ், ஆர், சுப்பையா, கே, எஸ், ஆர், செல்லத்துரை, என் திருவேங்கடம், எம். எஸ். அருணாசலம். சாமுவேல், துரைராஜ, எம்; இரத்தினம் ஆகியோர் பெரும்பங்கேற்றனர்.

நிதிக் குழுவினர் இன்றுவரை ரூபாய் 4000-மும் சுமார் ரூபாய் 1 000 மதிப்புள்ள அரிசி, பருப்பு வகைகளும்; ஏராளமான ஆடைகளும் சேர்த்துள்ளனர்; நிதி வசூல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நிதியளிக்க விரும்புபவர்கள்-24, கல்மண்டபம் ரோடு, இராயபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். என்று வடசென்னை புயல் நிதிக்குழு செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்,

சென்னை 8-வது வட்டம்

பொதுச்செயலாளரின் அறிக்கைப்படி 8-வதுவட்டம் (பெத்து நாயகன்பேட்டை) தி.மு கழகம், மக்கள் மறுமலர்ச்சி மன்றம் ஆகியவைகளின் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் 11—12—55 ஞாயிறு காலை பேட்டையின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்று-புயல் நிவாரண நிதியைத் திரட்டினர். ரூபாய் 60-0-0, இரண்டு மூட்டை அரிசி, ஆயிரத்துக்கு மேற்பட்ட பழைய ஆடைகளை வசூலித்தனர்.

மலேயாவில்

மலேயாவிலுள்ள தமிழர்களும். சில நிறுவனங்களும் தென்னகத்தின் புயல் நிவாரண நிதிக்காக நிதி திரட்டி வருகின்றனர்.

பொங்கற் புதுநாளன்று திராவிடர் இல்லந்தோறும் இருக்க வேண்டிய எழில்மிகு ஏடு.

திராவிடன்பொங்கல்மலர்

* அறிஞர் அண்ணா, மற்றும் திராவிட எழுத்துலகச் சிற்பிகள் எழுதும் கதை, கட்டுரை கவிதைகள்
* ஓவிய நிபுணர் பாலு சகோதரர்கள் தீட்டும் மூவண்ண முகப்பு.

நூறு பக்கங்கள் : விலை ரூபாய் ஒன்று

சந்தா நேயர்கள் மலருக்கென தனியாக ரூபாய் ஒன்று அனுப்புதல் வேண்டும். — நிர்வாகி 'திராவிடன்'

வல்லரசுகளின் விசித்திர நாடகம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

போல, டல்லஸ்கள் தங்களின் வழக்கமான பல்லவியை இன்றும் சிறந்த பக்கமேளத்துடன் பாட சந்தர்ப்பம் கிடைத்தது.

அதுபோலவே இந்தியாவின் அண்டை நாடுகளான பாக்கிஸ்தானும்-இலங்கையும் அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்கிப் பேசவும் அதே சமயத்தில் தங்களுக்குள்ளாக அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டிய காஷ்மீர் பிரச்னை போன்றவைகளி லெல்லாம் — மேலும் வேறுபாடுகளை வளர்க்கவுமான வீண்வம்பினைத்தான் புல்கானின்—குருசெவ் பேச்சுக்கள், விலைக்கு வாங்கியிருக்கின்றன.

பொதுவுடமைக் கொள்கை மலர்ந்துள்ள நாட்டின் முக்கியத் தலைவர்களை வரவேற்கும் வாய்ப்பினை பெற்றமைக்கு இந்தியத் துணைக்கண்டமும்-அதில் வாழும் மக்களும் எந்த அளவுக்கு மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தனரோ—அந்த சூழ்நிலையை அத்தலைவர்கள் திருப்பிச் செல்வதற்குள்ளாக தாங்களே தங்களது பேச்சின் காரணமாக சிதறடித்துக் கொண்டமைக்கு உண்மையிலேயே வருந்துகிறோம்.

ருஷ்யத் தலைவர்களும், மற்றும் அராபிய மன்னர், நேபாள மன்னர், ஆகியோரும் இந்தியாவுக்கு வந்ததின் காரணமாக அவர்களை உபசரித்ததற்காக ஆகியுள்ள 20-லட்சத்து 80-ஆயிரம் ரூபாய் உபமான்யத்தை நிறைவேற்றுவதற்காக 10—12—55 அன்று டெல்லிப் பாராளுமன்றத்தில் இந்திய வெளிநாட்டு துணை அமைச்சர் எ.கே. சந்தா அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தபோது எதிர் கட்சிகளைச் சார்ந்த தோழர் என். சி. சட்டர்ஜி, எச். வி. காமத் ஆகியோர் நம்நாட்டுக்கு விருந்தினராக வந்துள்ள ருஷ்யத் தலைவர்களின் கூற்றுகள் சரியானதா?

இதற்கு முன்பும் இப்போதும்; வந்துள்ள மற்ற நாட்டுத் தலைவர்கள் ருஷ்யத்தலைவர்களைப் போல சர்ச்சைக்கிடமான பேச்சுகளில் ஈடுபடாதிருக்கும்போது, இவர்கள் இவ்வாறு பேசி, விருந்தினருக்கிருக்கவேண்டிய தனிச் சிறப்பைக் கெடுத்துக்கொள்வது மட்டுமல்லாமல், இந்தியாவுக்கும் வீண்வம்பினைத் தேடித்தந்திருக்கின்றனரே; என்று கேள்விகளை அடுக்கினர்.

இது குறித்து, ஏறத்தாழ ஒருமணி நேரம் விவாதம் நடைபெற்றபின் செலவுத் தொகையை. ஏற்பதென பாராளுமன்றம் முடிவு செய்தது. இங்கே நாம் எடுத்துக் காட்ட விரும்புவதெல்லாம், பொதுவுடமைத் தத்துவத்திற்கு வழி காட்டிய ஒரு மகத்தான நாட்டின் பிரதிநிதிகளாக வருகை தந்த தலைவர்களுக்காக நம் சர்க்கார் செலவிட்ட தொகையை அனுமதிக்க இப்படி விவாதம் நடந்திருப்பதே நமக்கு மனவேதனையாயிருக்கிறது. அந்த அளவுக்கு ருஷ்ய நாட்டுத் தலைவர்களும் தெரிந்தோ — தெரியாமலோ, வந்த வேலையை மறந்து தங்களின் சொந்த வேலையில் இறங்கியதின் காரணமாக, பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டிய அளவுக்கு அசம்பாவிதங்கள் ஏற்பட்டமைகண்டு சோவியத் தலைவர்கள் மட்டுமல்ல, மற்றும் அனைவருமே வருந்தத்தான் செய்வர்.

டெல்லிப் பாராளுமன்றத்தில் சோவியத் தலைவர்களின் கூற்றுகளை எடுத்துக் காட்டிப் பேசிய தோழர் என். சி. சட்டர்ஜி அவர்கள்கூட அத்தலைவர்களின் வரவேற்புக்கு ஆன செலவு ஊதாரித்தனமானது என்று கண்டிக்கவில்லை. 20 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவழித்து வரவேற்ற அத்தலைவர்களிடம் விருந்தினருக்கு இருக்கவேண்டிய தன்மை காணவில்லையே என்ற தனது வருத்தத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே இந்தியத் துணைக்கண்ட மக்களைக் கண் துடைக்கும் வேலையில் — இந்தியாவுக்கு வருகை தருவது-உதவி செய்வது என்ற பேரால் தங்களின் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் சொல் செயல் ஆகியவைகளில் தான் உலக வல்லரசுகள் ஈடுபட்டிருக்கிறதேயல்லாது வேறில்லை.

உலக சமாதானத்திற்காக போரிடுவோம் என்று வல்லரசுகள் கூப்பாடு போடுவதிலேயே அவைகளின் லட்சணம் விளங்குகிறதல்லவா? சமாதானத்திற்காக போரிடுவார்களாம்!

அனுதாபம் தெரிவிக்க வந்தவர்கள்-அவ்வீட்டில் கொடிவிட்டிருந்த பாகற்காய் மீது கண் வைத்து தங்களின் ஒப்பாரியை உரத்த குரலில் எழுப்பியவர்களின் போக்கிற்கும். சமாதானத்தை உலகனைத்தும் நிலைநிறுத்துவோம் என்று சொல்லிக்கொண்டே "போர் வெறியர்கள்" என்று சொல்லப்படுபவர்களை வம்புக்கிழுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வேறுபாடிருக்க முடியுமா?

துக்கம் விசாரிக்க வந்த மாமியார் மருமகளுக்கு இறந்து பட்டவர்களின் குடும்பத்தார் மீது உண்மையான அனுதாபம் இல்லை ஆனால் பந்தலிலிருந்து பாகற்காயை பறிப்பதற்காக தமது ஒப்பாரியை உரத்தகுரலில் எழுப்பினர்.

அதுபோல, இந்தியாவின் மீது வல்லரசுகளுக்கு உண்மையான அனுதாபம் இருக்கிறதாயென்பது ஐயப்பாட்டுக் குரியதேயாகும். ஆனால் இந்தியாவை எப்படி பயன் படுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணத்தைக் கொண்ட வல்லரசுகள் அனைத்தும் இந்தியாவுக்கு உதவிசெய்வதாகவும் அதன் வளர்ச்சியில் அக்கறைஇருப்பதாகவும்போட்டி போட்டுக்கொண்டு குரலெழுப்புகின்றன.

நடக்க இருப்பவை

சென்னையில் சிறப்புக் கூட்டம்

தென்பகுதி ரெயில்வேமென் யூனியன் நிதிக்காக மேற்படி யூனியன் சார்பில் 17-12-55 சனி மாலை 5—30 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெறும், கலைஞர் மு. கருணாநிதி பேசுவார். நன்கொடை ரூ 1. அணா 8.

அழகிரி நூலகம் திறப்பு விழா

18-12-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னை திரு.வி.க.திடலில் (கான்ரன் ஸ்மித் நகர்) திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற சார்பில் அழகிரி நூலக திறப்பு விழா நடைபெறும். கவிஞர். கண்ணதாசன், ஆர். எஸ்.பாண்டியன், க. அறிவழகன், இளமாறன் பேசுவர்.

பொன்னேரி

தி. மு. கழக சார்பில் 18—12—55 ஞாயிறு மாலை 5-மணிக்கு பொன்னேரி வண்டி மேடு திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர். இராதாமணு என் தலைமையில் தோழர்கள், என்.வி. நடராசன். இளம்பரிதி ஆகியோர் பேசுவர்.

திருச்சியில் சிறப்புக்கூட்டம்

புயல் நிவாரண நிதிக்காக, திருச்சி தி. மு. கழக சார்பில் 18—12—55 ஞாயிறு காலை 9-மணிக்கு சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர். அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் கலைஞர் கருணாநிதி, எம். எஸ். மணி, ஆர். நாகசுந்தரம், எம். சி., பேசுவர். நன்கொடை ரூ. 1, அணா 8, 4.

12-வது வட்ட தி. மு. க.

புயல் நிவாரண நிதிக்காக 12-வது வட்ட தி. மு. க. சார்பில் 17-12-55 சனியன்று காலை 10-மணிக்கு ஒவ்வொரு தெரு வழியாகவும் கழகத் தோழர்கள் ஊர்வலம் வருவர். அனைவரும் பொருள், துணி ஆகியவை அளித்து உதவ வேண்டுமாறு 12-வது வட்ட தி. மு. கழக செயலாளர் நெல்லை அரசு அறிவிக்கிறார்.

பெங்களூர்

தி. மு கழக சார்பில் 25—12—55 ஞாயிறு மாலை 5-மணிக்கு பிளாக் பள்ளி (சிவாஜி நகர்) தி. மு. கழக எதிரிலுள்ள திடலில் மாபெருங்கூட்டம் தோழர். ஜி. எப். லூயிஸ் தலைமையில் நடைபெறும். தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், சி சோழன். ஜே. கனகசுந்தரம், பேசுவர். அதுசமயம் துணைப் பொதுச்செயலாளருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

புயலால் பாதிக்கப்பட்ட ரயில்வேத் தொழிலாளர்களுக்கு

உடனடி நிவாரணம் வழங்க வேண்டும்

தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியன் வேண்டுகோள்

தஞ்சை, திருச்சி, இராமனுதபுரம், மதுரை முதலிய மாவட்டங்களில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. பலர் உயிர் இழந்துள்ளனர், பொருள் சேதமும் பெருத்த அளவில் ஏற்பட்டுள்ளது. தினம் கிடைக்கும் தகவல்கள் மனதை புண்படுத்துகிறது. S. R. M. U. திருவாரூர் கிளை செயலாளர் திரு. ஆறுமுகம் மூலமும், பொதுச் செயலாளர் திரு வீராசாமி எம். பி. மூலமும் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து, வேதாரண்யம், கோடிக்கரை, தோப்புத்துறை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதியில் உள்ள பொதுமக்களும் ரயில்வேத் தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பலருடைய இருப்பிடமே தெரியவில்லை. வேதாரண்யத்தில்மட்டும் சுமார் 600—பேர் இறந்துவிட்டார்களென தெரிகிறது. மேற்குறிப்பிட்ட பகுதிகளில்தான் ரயில்வேத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் எடுத்துவரும் நிவாரண நடவடிக்கைகள் பாராட்டக்கூடியதாக உள்ளன என்றும் 1952-ம்ஆண்டு புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் ஏதோ உதவிசெய்து பிறகு கவனிக்காமல் விட்டது போலல்லாமல் உடனடி உதவிகள் செய்வதுடன் ஏற்பட்டுள்ள நட்ட விபரத்தை அறிந்து அதற்கு ஏற்றவகையில் ஈடு செய்யவேண்டுமென ஆட்சியாளரை கேட்டுக்கொள்கிறோம்.

சென்ற புயலில் பாதிக்கப்பட்ட ரயில்வேத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. இத்தடவையாவது அவர்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய ஆன நடவடிக்கை அரசாங்கம் எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்வதுடன் பொதுமக்களும் இதர பகுதியிலுள்ள ரயில்வேத்தொழிலாளர்களும் புயல் நிவாரண நிதிக்கு தங்களாலான உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

பொன். பரமசிவம்
கூட்டுப் பொதுச் செயலாளர்

சி. இராகவானந்தம்
தலைவர்

சென்னையில் சிறப்புக் கூட்டம்

பொதுமக்களுக்கும்—ரயில்வே தொழிலாளர்களுக்கும் வேண்டுகோள்

தென் பகுதி ரயில்வே மென்ஸ்யூனியன் 1952-ல் ஆரம்பிக்கப்பட்ட மூன்று ஆண்டுகாலமாக நல்ல முறையில் பணி செய்து கொண்டுவரும் பொழுது பதவி மோகம் கொண்ட சிலர் செய்கையால் திரு வ. வீராசாமி M. P. அவர்கள் தன் பொதுச் செயலாளர் பதவியை விட்டு விலகிக் கொள்ளுகிறேன் என்று எனக்குக் கடிதமெழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் என் தலைமையில் கூடிய மத்திய நிர்வாக குழுக் கூட்டம் சர்வாதிகார தோரணையில் நடந்த திரு எ. கே. சச்சிதானந்தத்தை யூனியனிலிருந்து 5 ஆண்டுக்கு விலக்கியதுடன், பெரம்பூர் கிளையை கலைத்துவிடுவதெனவும் முடிவெடுத்தது.

திரு சச்சிதானந்தம் சரியான கணக்கு வழக்கைஒப்புவிக்காததாலும் 'தொழில் முரசு' இதழைஅனுப்பாததாலும் யூனியனுக்கு நிதிதிரட்டவேண்டியநிலைஏற்பட்டுவிட்டது

எனவே சென்னை கிளை நிர்வாகிகள் முயற்சியால் யூனியன் நிதிக்காக **சென்னை கோகலே மண்டபத்தில் 17—12—55 மாலை 5-மணிக்கு கலைஞர் கருணாநிதி சிறப்பு சொற்பொழிவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.** கூட்டம் வெற்றியடைய ஒத்துழைக்கும்படி சென்னை பொதுமக்களையும் ரயில்வே தொழிலாளர்களையும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்

சி இராகவானந்தம்
தலைவர். S. R. M. U.

திண்டுக்கல்லில் புயல் வெள்ள நிவாரண நிதி வசூல்

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பது சம்பந்தமாக திண்டுக்கல் நகர் மன்றத்தின் அவசரக் கூட்டம் திரு டி. எம். எம். துரைராஜு செட்டியார் அவர்கள் தலைமையில் 8-12-55 அன்று சகல அரசியல் கட்சிகளை சார்ந்தவர்களும், நகரப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். துவக்கத்தில் தோழர்கள் தாசில்தார் கே அருணாசலம், பி. மதன கோபால், சவரிமுத்து பிள்ளை, எம். எஸ். அப்துல் சத்தார், ஓ என். சுந்தரம், பயில்வான் கருப்பண்ணன், பி. சமதர்மம் ஆகியோர் பேசினார்கள். உடனடியாக வசூல் வேலைகளில் இறங்க வேண்டுமென்றும் கூடுமான உதவியை உடனடியாக அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு கீழ்கண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது.

தலைவர் டி. எம். எம். துரைராஜ் செட்டியார். உறுப்பினர்கள்: நகரசபை உறுப்பினர்கள் 32 பேர்களுடன் பி. சமதர்மம், வி. மதனகோபால், தேவப்பிரகாசம், டாக்டர் சூரியன், கே. பழனிவேல் மற்றும் பலர்.

2-மணி நேரத்தில் ரூபாய் 2250 வசூல்.

9-12-55 அன்று புயல் வெள்ள நிவாரண நிதிக்குழு தலைவர் டி. எம். எம். துரைராஜ் செட்டியார் அவர்கள் தலைமையில் நகரப் பிரமுகர்கள் பி. எம். கோவிந்தராஜு. பி. சமதர்மம் (தி.மு.க.) ஓ.என். சுந்தரம், எ. எஸ். எஸ் சிவசூரிய நாராயணன், எம்.எஸ். அப்துல் சத்தார், டி சாரங்கபாணி, நாகூர் பிச்சை, எம்.எஸ் டி. பாலசுப்பிரமணியம், ஓ. சின்னச்சாமிபிள்ளை, மற்றும்பலர் அடங்கிய பெரும் கூட்டம் ஒன்று இரவு 7-30க்கு புறப்பட்டு 9-30க்குள் ரூபாய் 2250வசூல் செய்யப்பட்டது மற்றும் நகரப் பகுதிகளில் 3000 வரை வசூல் செய்யப்பட்டிருப்பதாகவும் ஜவுளி வர்த்தகர்கள் சங்கம் 2000மும் துணிமணிகள் சேகரித்திருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. வசூல் குழுவினர் மேலும் தீவிரமாக வசூல் வேலைகளில் இறங்கியுள்ளனர். ஷைகுழுவினருடன் தோழர் பி. சமதர்மம் அவர்கள் வசூல் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

கம்பாரில் 'திராவிடன்'

அவ்வை புத்தக நிலையம்
142. ஜாலன் இட்ரிஸ் கம்பார்
பேராக்—மலேயா

அரசு. துணைச்செயலாளராக தோழர் அழகரசு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள்-நெல்லை அரசு. இரா-வில்லாளன் பி. எஸ். மணி. இளங்கார்வண்ணன் எஸ் முனுசாமி, இறைஒளி, இராஜன், தமிழகன், ரா. வளவன், செல்லம், பிச்சை. அழகரசு ஆகிய 12-பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பணம் வசூலிக்கும் பொறுப்பை தோழர் இறைஒளி, பிச்சை, படடுராஜராசன் ஆகிய நால்வரும், தங்கள்முழு உழைப்பைக் காட்டி வசூலிப்பதென ஒப்புக்கொள்வதுடன் மாதா மாதம் 10-தேதிக்குள், பொருளாளரிடம் பணத்தை ஒப்படைப்பதென உறுதி கொடுத்ததை கூட்டம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுகிறது.

மற்றும் சொற்பயிற்சி மன்றம், கூத்து இயல் கழகம், நூற்படிப்பகம், இரவுப்பள்ளி, ஆகிய பகுதிகளுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

பொங்கல் (ஆண்டு) விழாவை அறிஞர் அண்ணா அவர்களைக்கொண்டு நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கப்பட்டதுடன் பொருளாளர் எ. கண்ணப்பன் அனைவரையும் பாராட்டிப் பேசியபின் நெல்லை அரசு நன்றிகூற கூட்டம் முடிந்தது.

சேலம் மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு வேண்டுகோள்

★

1. கடும்புயல், மழையினால் பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகி யிருக்கும் தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு உணவு, உடை, உறையுளுக்கு வேண்டிய பொருள்கள், பணம் ஆகியவற்றைத் திரட்டி உரியவர் மூலம் அனுப்பிவைக்குமாறு நம் மாவட்டத்திலுள்ள தி. மு கழகக் கிளைகளும் தோழர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

2. பொதுச்செயலாளர் அவர்களின் 7—12—55-ஆம் தேதிய அறிக்கை 32/55-ன் படி தி. மு. கழக உறுப்பினர்கள் பதிவு செய்யும் விண்ணப்பத்தாள்களை, தோழர் ப. இராமலிங்கம் துணைச் செயலாளர், சேலம் மாவட்ட தி. மு கழகம், குள்ளம்பட்டி (அஞ்சல்) இடைப்பாடி (வழி) சேலம் மாவட்டம், என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

3 மாவட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட விண்ணப்பத்தாள்களை வேறு கிளைக்கோ, கிளைகளை புதிதாக தோற்றுவிக்க இருக்கும் பொறுப்பாளர்களுக்கோ கொடுக்க வேண்டாமென்றுக் கேட்டுக் கொள்கிறோம்.

4 உறுப்பினர்கள் சேர்த்த விபரத்தையும், அதற்குண்டான கட்டணத்தை தலைமை நிலயத்திற்கு அனுப்பியது பற்றிய விபரத்தையும், மாவட்டக் கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பி இராமலிங்கம் துணைச் செயலாளர்

செய்திகள்

●

இலங்கை

நீர் கொழும்பு
மாணவர் மறுமலர்ச்சி மன்றம்

மேற் கண்ட மன்றத்தின் ஆரம்பப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை (26—11—55) இரவு 8-மணியளவில் 200 மங்களரோடு மங்கள இல்லத்தில் தோழர் வி. பி வீரையா அவர்கள் தலைமையில், நடைபெற்றது. தலைமையுரையின் பின் தோழர்கள். எஸ். எம். சண்முகம், கே பி. குணசீலன். கே. பெருமாள், வி. பி ஜெயசீலன், எம். எ. அண்ணாதாசன் ஆகியோர் மாணவர் மறுமலர்ச்சி மன்றம் துவக்கப்பட வேண்டிய அவசியத்தையும் நோக்கங்களையும் குறிப்பிட்டு இலங்கை வாழ் தமிழரின் இக்கட்டான சூழ்நிலையில் தமிழரின் ஒற்றுமையின் அவசியத்தையும், தமிழ்காக்க இதுபோன்ற மன்றங்களும், இயக்கங்களும், ஒற்றுமைக்கு பிறப்பிடமாக விளங்குமென குறிப்பிட்டார்கள்.

மன்றத்திற்கான சட்ட திட்டம் வகுக்கும் பொறுப்பை ஐவரடங்கிய தனிக்குழுவிற்கு பொறுப்பு கொடுக்கப்பட்டது. மன்றத்தின் முதலாவதுப் பணியாளர்களாக கீழ்கண்ட தோழர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர் செயலாளர் கே. பி. குணசீலன், உதவிச் செயலாளர் எஸ் எம். சண்முகம் பொருளாளர் வி. பி, வீரையா, செயற்குழு உறுப்பினர்களாக 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய்

5-வது வார்டு தி. மு. க. கிளை

4—12—55-ந்தேதி மாலை 7மணிக்கு மான்கூர்டு டி. ஜி. இராமச்சந்திரன் இல்லத்தில் 5-வது கிளை தி மு. கழகக் கூட்டம் தோழர் இராமச்சந்திரன் தலைமையில் செயலாளர் உதகை தோழர் செல்வராசன், சுக்கூர், அப்துல் கபூர். பேசினர்.

பேராசிரியர் இருதயராஜ மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

*

சௌந்திரபாண்டியனார்
பகுத்தறிவு மன்றம்.

1—12—55 மாலை அன்பகத்தில் மன்ற செயற்குழுக் கூட்டம் தோழர் ஞானையா தலைமையில் கூடியது.

சென்னை 37-வது வட்டம்

29—11—55-ல் இரவு 8-மணிக்கு தோழர் எ எல். கே. சாமி அவர்கள் தலைமையில் கழகப் பணிமனையில் 37-வது வட்ட தி. மு. க, செயற்குழு கூட்டம் நடைபெற்றது, அதுபோது பேராசிரியர் இருதயராஜ மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்வதுடன். பொதுச்செயலாளர் அறிக்கைக்கேற்ப 31—7—55-ல் நடைபெற்ற சென்னை மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எங்கள் வட்ட செயலாளர் கோ. இளவரசு அவர்களை பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுத்து அனுப்பிய உறுப்பினர்களுக்கு இச்செயற்குழு தன் நன்றியறிதலையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது என தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் மு. அரங்கநாதன் அவர்கள் தனது பொருளாளர் பதவியையும் செயற்குழு உறுப்பினர் பதவியையும் தற்காலிகமாக சிறிது காலம் விலகி இருப்பதாக கொடுத்த விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது அதற்குப் பதிலாக மேற்படி பொருளாளர் பதவியை தோழர் பொ. ஏழுமலை அவர்களிடம் செயற்குழுவால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஐந்து மாத வரவு, செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மற்றும் பல பிரச்னைகள் விவாதித்து முடிவு செய்த பின்னர் துணைச் செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

சென்னை 12-வது வட்டம்

10—12—55 அன்று தோழர் பி. கி. எஸ். மணி தலைமையில் நடைபெற்ற 12-வது வட்ட தி. மு க. கிளையின் தீர்மானங்கள் :

முன்னாள் செயலாளர் தோழர் எஸ். செல்வராஜு, துணைச்செயலாளர் ஆகியோரின் விலகல் மடலை ஏற்றுக் கொள்வதுடன் இதுநாள்வரை அவர்கள் ஆற்றிய தொண்டுகளுக்காகப் பாராட்டுகிறது.

செயற்குழு உறுப்பினர்களாக இதுவரையில் பணியாற்றிய தோழர்கள் கே. ஏ. கண்ணபிரான், ஏகாம்பரம், டி. கோதண்டராமன் ஆகியோரது விலகல் மடல்களும், ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புதிய செயலாளராக தோழர்-நெல்லை

பொங்கல் விழாவை அன்பகத்தில் நடத்துவதெனவும், மற்றும்செயற்குழு உறுப்பினர்களுக்கு சிறப்பு சந்தா வைத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆரப்பாளையம்

8—12—55 அன்று லால்குடி. நடராசன் நினைவுப் படிப்பகத்தின் உறுப்பினர் கூட்டம் திரு. பாலு தலைமையில் நடைபெற்றது அதுபோது படிப்பக வளர்ச்சி பற்றி நண்பர்கள் பலர் நல்லமுறையில் விளக்கினார்கள் பின்னர் ஏகமனதாக கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின,

பொங்கல் விழா விமரிசையாகக் கொண்டாடுவது.

தலைமைக் கழக அறிக்கைக்கேற்ப ஒவ்வொருவரும் உறுப்பினராவது

சொற்பயிற்சி மன்றம் துவக்குவது.

கீழ்க்கண்ட 7 பேர் கொண்ட வசூல் கமிட்டி அமைப்பது. சி மனோகரன், வி கே தென்னரசு, வி. பாலு மா. வெள்ளை, சி மணி, ஆர் எஸ் எஸ். மணி, இராசி இராமச்சந்திரன், இரா. சு. செல்லம், க. ராசு.

பட்டுக்கோட்டை
வட்ட தி. மு. க.

பட்டுக்கோட்டை அறந்தாங்கி ஆகிய தாலூக்காக்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட்டக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என செயலாளர் கிருஷ்ணமூர்த்தி அறிவிக்கிறார்.

பிறப்பு

பட்டுக்கோட்டை (வட்ட) தி மு. கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தியின் துணைவியார் தோழியர் சரஸ்வதி காலையில் 5-12-55 திங்கள் இரவு 8-மணிக்கு ஒரு ஆண் குழந்தைக்கு தாயானார். தாயும்சேயும் நலம்.

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ் : 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஒட்டல், மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

—திராவிடப் பூங்கா—

நீரோ!

நீரோ—புகழ் சூழப் பெற்ற, சேர் பரம்பரையின் வழி வழி தோன்றியவன்.

கி. பி. 37-ல் பிறந்து, கி. பி. 54-ல் அரசுரிமைப் பெற்று, பதினுன்கு ஆண்டுகள் ஆட்சி செலுத்தி, கி. பி. 68-ல் அரசுரிமை இழந்து, அவ்வாண்டே தற்கொலை செய்து மாண்டான் நீரோ.

*

நீரோ, என்ற பெயரைக் கேட்டாலே அருவருப்பும், சலிப்புந் தான் தட்டுகிறது!

அவன் ஓர் கொடியன்! கெடுமதி கொண்டோன்! குடியன்!. காமுகன்!

அவனை எத்தகையோனென, தெள்ளிதே அறிய வேண்டின், நம்மிடை வழங்கும் முது மொழியாகிய: 'கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின் கடும்புலி வாழுங் காடு நன்றே' என்ற ஒன்றைக் கொண்டே அளந்துணரலாம்.

நீரோவை என்றும் நினைவுபடுத்தக்கூடிய பழமொழி ஒன்று நிலவி வந்துள்ளது.

அதுவே: When Rome was burning Nero was fiddling!—ரோமாபுரி தீப்பற்றிச் சாம்பலாகும்போது, இன்பத்தில் திளைத்து, இசை மீட்டுக் களித்தானும் நீரோ!

என்னே வன்நெஞ்சம் அவனுக்கு! அத்தகு நீச "மன்னனைப் பெற்றெடுத்தப் பழி அழகி அக்ரிப்பானுவைச் சூழும்.

*

பெண்கள் அழகில், கற்பில் சிறந்த நாடு நம் தமிழ் நாடு! இது இன்று நேற்றையலிருந்து அல்ல! தொன்று தொட்டே!

அதற்கு நேர் முரணைகக் கற்பிழந்து, மறைந்த ராஜ்யம் ரோம் ராஜ்யம்!

கற்பைக் கிஞ்சித்தும் போற்ருத நீரோவின் தாய், அக்ரிப்பானு, காமக் களஞ்சியமாக உருவெடுத்துத் தகாத இழி செயல்கள் பல புரிந்தாள்!

தனது உடன் பிறந்த அண்ணன் காலிகுலா விடமே காதலுற வாடினுள் என்ருல் போதுமே அவள் கற்பை எடைபோட!

அதோடு தன் மைந்தன் நீரோவைப் பட்டத்திற்குரியவனுக்க, தனது சிற்றப்பனுகிய கிளாடியஸ்ஸை சாகசத்தால் மயக்கி, கிளாடியஸ்ஸின் சொந்த மனைவியான அரசி மெசாலினுவை விலக்கவும், துறத்தவும், சதிபல செய்து, கடைசியில் அவளைக் கொன்று தீர்த்து விட்டே, மெசாலினுவின் இடத்தைக் கைப்பற்றி, சிற்றப்பன் கிளாடியஸ்ஸின் மனைவியானுள்! பிறகு கிளாடியஸ்ஸையுங் கொன்று போட்டு, நீரோவைப் பட்டத்து அரசனுக்கினுள் அக்ரிப்பானு,

அப்படிப் பட்டத்திற்கு வந்த நீரோ யாருக்குப் பிறந்தான் என்பதே தெளிவில்லா வகையில் அக்ரிப்பானுவின் நடத்தை யிருந்தது. அக்ரிப்பானுவின் அண்ணன் காலிகுலா, தனக்குப் பிறந்தவர் நீரோ என்ருன்.

இல்லை! இல்லை! எனக்கே பிறந்தான் நீரோ என்ருன், அக்ரிப் பானுவை மணந்த நீயஸ் டொமி ஷியஸ் அனே பார்பஸ்!

இதோடு அக்ரிப்பானு நின்ருளா என்ருல், அதுதான் இல்லை. ஒருசமயம், நீரோவிற்கு அதிகமாக மது ஊட்டி, போதை ஏற்றி, அவனையே, அதாவது பெற்ற மைந்தனையே, அணைத்து மகிழ ஆசைகொண்டாள் அச் சண்டாளி!

ஆனுல், மது மிகுதியால் போதையுற்ற போதிலும், பெற்ற தாயையே அணைத்திடும் இழி செயலை நீரோ ஏற்ருன் இல்லை!

வேறு பல மங்கையரை மருவி, அவர்களுடன் கூடி, ஆடி, பாடி, குடித்து மகிழத் தவறவில்லை நீரோ!

இவ்விதமாகத்தான் நீரோவைப் பற்றிக் கேட்டிருக்கக் கூடும்—படித்திருக்கக்கூடும். வேறு எவ்வகையிலேயோ அறிந்திருக்கக்கூடும்

*

ஆனுல்........?

"நீரோ"—என்னும் எழில் நூலொன்று கதை மன்னர், இராதாமணுளன், பேனுவினின்று பிறந்திருக்கிறது.

அது ஒரு புது முயற்சி! அது ஆராய்ச்சி நூலாக விளங்குவதே புதுமைக்குக் காரணம்.

எண்ணற்றப் பிற்கால ஆசிரியன் மார்க்ஸ் நீரோவை ஈவு இரக்க மற்றக் கொடியவனுகச் சித்தரித்து விட்டார்கள்.

ஆனுல் இராதா மணுளன் அவர்கள் பற்பல ஆங்கில மூல நூற்களைத் துருவித் துருவிப் பார்த்து, நீரோ கொடியன் அன்று! அவன் ஓர் நேர்மைக் குணம் படைத்தோன்! ஈவு இரக்கமுள்ளவன்! இளகிய மனங்கொண்டோன்! நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் நல்ல வினை செய்வதில் நாட்டம் உடையவன்! ஏழைகளின் பங்காளன்!—என்ற ஒரு நல்ல முடிவிற்கே வந்திருக்கிருர்.

இயேசுவின் சுவிசேஷம், கிருத்துவ மத போதனை, என்பவைகளில் மண்டிக்கிடக்கும் குருட்டுத்தனத்தையும், பகுத்தறிவிற்கு ஒவ்வாதனவற்றையும் வெறுத்து ஒதுக்கினுன் நீரோ!

அதனைக்கண்டு வெதும்பிய மதபக்தர்களும், கிருத்துவ மத அபிமான நூலாசிரியன் மார்களும், நீரோவை இறக்கித் தாக்கி, இட்டுக்கட்டி கூறினுர்கள்!—எழுதினுர்கள்!

இதுவே காரணம் அவனை ஒரு புன்மைக் குணம் வாய்ந்தவனுகச் சித்தரித்ததற்கு என்று தமது முடிவான, ஆராய்ச்சியின் பாற்பட்டக் கருத்தை உலவ விட்டிருக்கிருர் இராதாமணுளன்.

ரோமாபுரி எரிந்து சாம்பலாகிக்கொண்டிருந்த போது, அது தாளாது; துடி துடித்தான் நீரோ! அணைக்க அலைந்து திரிந்து அரும்பாடு பட்டான். தீயில் சிக்கினுரை ஆபத்தினின்று நீக்க முற்பட்டான். எப்பாடு பட்டும்

வந்தைவேள்

எரியும் ரோமாபுரியை அணைக்க முடியவில்லையே என ஏங்கித் துவண்டு வீழ்ந்தான்! அவனது உள்ளம் சோகத்தால் வாடியது!

நீரோ, தலைசிறந்த கலைஞன்! இசையரசு! நாடக மன்னன்! சொற் செல்வன்! கவிதா மணி! மொத்தத்தில் நல்லவன்!

வாடிய அவனது உள்ளம், சோகம் ததும்பும் சோகரகக் கவிதையைப்பாடி கவலை தீர்க்க எண்ணியது.

எடுத்தான் இசைக் கருவியை! இசைத்தான் சோகரசப்பாக்களை! அவ்விசையினூடே கண்ணீர் வடித்து அழுதான்! உருகினுன்! நீரோ!

இவ்வுண்மைகளை மறைத்தே, நாடு எரியும்போது அவன் நாரிமணிகளின் மடியில் தவழ்ந்து, இசை வெள்ளத்திலே மூழ்கி, காதல் அமுது உண்டுத் திளைத்தான் என திரித்து எழுதி விட்டார்கள். அதோடு ரோமாபுரியை எரித்தவன் நீரோ நீரோவே எனவும் எழுதித் தீர்த்து விட்டார்கள்.

தீயால் அழிந்துபோன ரோமாபுரியைப் புதுப்பிக்க வெளி நாடுகள் பல சென்று தனது கலைத்திறத்தால், பொற்காசுக் குவியல்களை மலை யெனத்திரட்டி, எரியுண்டு பாழான ரோமாபுரியை எழில் நகராக்க அரும்பாடு பட்டான்!

ஆக, ரோமாபுரி எரிந்ததைப் பற்றி ஆராத்துயர் உற்ருனே யொழிய, மாருக இன்னிசை எழுப்பி ஏனையோர் துடிக்க அவன் மட்டும் மகிழ்ச்சிக் கடல் ஆடினுனில்லை!.........என்பன போன்ற ஆராய்ச்சி முடிவுகளை இராதா மணுளன் அளித்துள்ளார்.

சுடோனியஸ், ஆர்தர் வீகால், ஹெண்டர்சன், மெரிவலி பரி, ராங்கி ஆகிய வரவாற்று ஆசிரியன்மார்களையும் சரித்திர வல்லுநர்களையும் தம் துணைக்கு அழைத்துக்கொண்டு, தக்க ஆதாரங்களுடன் வாதாடி, நீரோவை, அன்றந்த இலங்கைதனை ஆண்ட மறத்தமிழன — இராவணனுக்கு ஒப்பிட்டு, இராவணைப்போல் நீரோ நற்குண நற்சீலன்! பராக்கிரம சாலி! கலை வல்லோன்! நல்ல மன்னன்! என்று காட்டியுள்ளார்.

சுவைத்து இன்பமும், பயனும் அடைய வேண்டிய நூல்களில் இராதாமணுளனது 'நீரோ' தலையாயது எனலாம்,

நூற்றேழே பக்கங்களில் அவரது ஆராய்ச்சிக் கருத்துக்களை நளினமாக அடிக்கி விட்டார். அதுஒரு நல்ல ஆற்றல்!

முதல் பக்கத்தைத் திறந்து முதல் வரியைப் படிக்கத் துவங்கி விட்டால், கடை பக்கத்துக் கடைசிவரி "மன்னன் நீரோவின் புகழ் வாழ்க! வாழ்க!........... என்பது வரை, ஒரே துடிப்பில் படித்துத் தீர்க்கும் வண்ணம், அழகுடனும், விறுவிறுப்புடனும், காதல் சுவை ததும்பி, ஆனுல், மிதமுடன், வழியும் வண்ணமும், அந்நூலை ஆக்கி நமது பாராட்டு தலைப் பெற்று விடுகிருர் அன்பர் இராதாமணுளன்!

"அதிகம் சொல்லத் தேவையில்லை, அவளொரு ரோமாபுரி ராணி!".........

"தாய் வடக்கு! மகன் தெற்கு! வடக்கும் தெற்கும் எங்கே...... ஒன்று சேர முடியும்?......" என்பன போன்ற இடங்கள் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ள காத்துக் கிடக்கின்றன!

படிக்கும் போது, ஏதோ நிழற்படக் காட்சி காண்கின்றதோர் உணர்ச்சி, களிப்பு, மெய் மறத்தல், திருப்தி, அத்தனையுங் கிடைத்து விடுகின்றன "நீரோ" என்னும் அந் நூலில்!

குறை.........?

சொல்லியே தீர வேண்டுமானுல், ஏதேர் ஒன்று, இரண்டு எழுத்துப் பிழை, சந்திப் பிழை, என்பதாகக் கூறலாமே ஒழிய, சாதாரணமாக அந்நூல் ('நீரோ') யாவராலும் விரும்பிப் படிக்கக் கூடியதாய் அமைந்துள்ளது.

நீரோவைப் பற்றி அறிய "இராதா"வின் "நீரோ" நல்ல நூலே!

எங்கும் விற்பனையாளர்கள் தேவை

மனதிற்கு மகிழ்ச்சி யூட்டுவது

'அரசு' சுகந்த பாக்குத் தூள்

ம. சு. ராசன்
அரசு பாக்குத் தூள் தயாரிப்பவர்
பழனி ரோடு, திண்டுக்கல்

M. S. RAJAN
Arasu Betel Nut Manufacturer
Palani Road DINDIGUL

காணமற் சென்று விட்டார்!

●

அண்மையிலே மீனம்பாக்கம் நோக்கிச்சென்றேன்!—அங்கு
அவனிபுகழ் புல்கானின் வருகைகண்டேன்!—பொது
உடமை பூங்காவின் காவலனும்—தூய
உள்ளமுள்ள குருசேவும் இருக்கக்கண்டேன்!—பின்னவர்
சீர்மிகு சென்னையைச் சுற்றிப்பார்த்தார்;—நமது
செந்தமிழில் வரவேற்பை சிறப்போடேற்றார்—நல்ல
கருத்துதனை ஆர்வமுடன் எடுத்துரைத்தார்;—எனினும்
அவர்காணமல் சென்றதனைச் சொல்வேன் தம்பி!

எண்டிசையும் புகழ்பரப்பும் எழிற்றமிழில்!—கோணல்
இந்தியினை நுழைக்கின்றார் புறப்படுங்கள்!—இன்னும்
தாமதமும் தயக்கமும் கொள்வதேனோ?—என
தாரணியில் போர்முரசு ஒலித்தகாளை!—இன்று
ஆரியத்தின் தலைவனும் ஆச்சாரியாரின்—கொடிய
அடக்குமுறைக் கொள்கைக்கு ஆருயிர் விட்ட;—நமது
கண்மணிகள் தாலமுத்து நடராசனின்—தூய
கல்லறையைக் காணமற் கடிது சென்றார்.

தென்னகம் திராவிடத்தில் மொழியுணர்வு—தலை
தூக்காது தன்னாளிலென் றிருந்தபோது—நல்ல
எதிர்ப்புக்கும் அஞ்சாத எழில்உள்ளங்கொள்—நமது
ஈரோட்டுப் பெரியாரின் உழைப்பினாலும்—அணி
ஆர்ந்திடும் சொல்லழகு பேச்சுவன்மை—பலரை
ஈர்த்திடும் சக்திகளை வளர்த்துவிட்ட—நமது
வைக்கம்வீரர் தம்மையும் அண்ணாவையும்—இங்குநலி
களிப்புடனே காணமற் சென்றுவிட்டார்.

காலையில் தங்கிவாழும் உழைப்பாளி—நல்ல
உணவின்றி உடையின்றி வாடுவதையும்—பாச
மதலைக்குப் பாலூட்ட மார்க்கமின்றி—மறு
மதலையை விற்றுவாடும் மாதர்களையும்—தன்
வேல்விழியாள் மானமதை காக்கவிரும்பி—பாரில்
வேலையின்றி வீதியிலே ஏங்குவதையும்—பம்பாய்
காமாட்டி புரமதின் வீதிகளையும்—அதன்
காட்சிகளை காணமற் சென்றுவிட்டார்.

சோவியத்தின் தலைவர்கள் தந்தவருகை—எமது
சோர்ந்துள்ள தோள்களுக்கு உணர்வுதந்து—நமது
செந்தமிழின் வரவேற்பை அன்புடனும்—வீரச்
சிரிப்புடனும் கரங்குவித்து வாங்கிச்சென்றார்—இந்தி
வெறியரே மாஸ்கோவில் எங்கள்தமிழ்—தன்
விலாநோகச் சிரிப்பதைப்பார் உம்மைநோக்கி—எமது
தாய்நாடாம் திராவிடத்தைத் தந்துவிட்டு—பொல்லா
தீயோரே விரைவினிலே ஓடிவிடும்—நச்சுக்
குணமதை யுடையவரே உமதுசூதை—புல்கானின்
காணமல் விரைந்தே சென்றார்.

—சி. பன்மொழியன்

●

அமரர் கல்கி—தொடர்ச்சி

'இது என்ன ஆச்சரியம்' இப்படியும் நடக்குமா என்று ஒருவரையொருவர் கேட்டு மூக்கில் விரல் வைத்தவர்—மூளையைத் தட்டிப் பார்த்தவர் எல்லோரும் இனி உலகத்திற்கு அனர்த்தம் வரப்போகிறது என்று கூறிக்கொள்கிறார்கள்.]

*

எமதர்மராஜன் கோபாவேசத்துடன் அங்குமிங்கும் அலைந்தவாறு உறுமுறுகிறார்—மீசையை முறுக்குகிறார். சித்ரபுத்திரன் சிரம் குனிந்து செவி சாய்த்து நிற்கிறான்.

எ; சித்திர புத்திரா!

சி: ஐயா!

எ: இன்றைக்கு வர வேண்டிய விருந்தாளிகள் அனைவரும் நம்ராஜ்ஜியத்திற்கு வந்துசேர்ந்து விட்டார்களா?

சி: ஆம், பிரபு.

எ: (மீண்டும் கோபத்தில்) என்ன சொன்னாய்! என்னிடம் பொய்யா! டேய் சித்திர புத்திரா!

சி: ஐயா! பொய் பேசிபிழைத்தக்காலம் மலையேறி விட்டது.

எ: நீ பேசுவது உண்மையென்றால் கல்கி எங்கே?

சி: அது வெள்ளிக்கிழமைதான் வெளிவரும்.

எ: அதைக் கேட்க வில்லை. ஆசிரியர் 'கல்கி'?

சி: ஹா!......வேடிக்கையாய் இருக்கிறதே பிரபு! 10-மணிக்கெல்லாம் என்னை நாடி வந்தார். நான் தங்களைத்தேடி வந்தேனே.

எ: அது தெரிகிறது சித்திரா! ஆனால் விஷ்ணு, அவர் சாகவில்லை என்று சொல்லுகிறாரே!

சித்: ஆ! விஷ்ணு சொல்லுகிறாரா? வேடிக்கையாய் இருக்கிறதே!

எ: வேடிக்கைத்தான். வெட்கம் தாங்காது உன்னைத் தேடி வந்திருக்கிறேன், பூலோகத்தில் மக்கள் 'அமரர் கல்கி' என்று கோஷமிடுகிறார்களாம்,

சி; பூலோகத்தில் என்று சொல்லாதீர்கள். ஏன் திராவிட நாட்டில் என்று சொல்லுமே. அவர்கள் அவ்வளவு மட்டரகம் அல்ல.

எ: ஏன் தமிழ்நாட்டில் என்றுதான் வையுமே!

சி: தமிழ் நாட்டிலா! இருக்க முடியாது. அது அறவே தவறு பிரபு!

எ: அடா! சென்னையில் என்று சொல்லுமே!

சி: அதற்கு ஒரு சான்று கூடக் கிடைக்காது.

எ: போகட்டும். யாரோ சில பேர் கீழ்ப்பாக்கத்தில் சொல்லுகிறார்கள் என்று சொல்லுமே!

சி: அது சரி. இருக்கும்...அவர்களுக்காகத்தானே அந்த இடத்தையே ஒதுக்கிக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் அது மட்டுமா சொல்வார்கள். மனிதனை "மகான்" ஆக்குகிறார்கள். செத்தவனை "அமர"னாக்குகிறார்கள் அது "அவாள்"களுடைய செயல் தானே.

எ: (கோபத்தில்) நிறுத்து. நீ பேசுவது வாதத்திற்கு உதவாது. வகுப்புத் துவேஷம் கொண்டு பேசுகிறாய் ஏன் பாரதியாரை "அமரகவி" என்று 'அவாள்' அழைக்கவில்லையா?

சி: அத்தனை பெருந்தும் ஆதிகுருவான கம்பனை 'அமர கம்பன்' என்று அழைக்க நாவரவில்லையே 'அவாளு'க்கு. இப்போது கூறுங்கள் வகுப்புத் துவேஷம் யாருக்கு இருக்கிறதென்று.

[எமன் ஒன்றும் பேச முடியாமல் திணறியவராய் பேப்பரை கையில் எடுத்து கடிதம் எழுதுகிறார்.]

விரைவு அஞ்சல் A/Due

ஓம்,

ஸ்ரீ விஷ்ணு அவர்கள்,
C/o வி. லக்ஷிமி,
(வயா) ஆகாயம்,
வைகுண்டம்.

ஐயா,

வந்தனம், உபயக்ஷேமம், கீழ்ப்பாக்க வாசியும், 'அமரதாராவின் அரைகுறை 'ஆதரு'மான "கல்கி" மூச்சுவிட மறந்தது உண்மைதான் என்பதை என் தலையிலடித்து சத்தியம் செய்கிறேன். கல்கியை விட பல்லாயிரம் மடங்கு அறிவாற்றல் படைத்த மறைமலை யடிகள், தமிழ்ப் பெரியார் டி. கே. சி., தமிழ்க் கடல் திரு. வி. க., கவி தேசிக விநாயகம் பிள்ளை போன்றோரை 'அமரர்' என்று அழைக்காது 'கல்கி'யை அமரர் என்று அழைக்கவேண்டுமென்றால், அதிலே எவ்வளவு வகுப்புத் துவேஷம் கலந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். 'அவுட்' ஆனவர்களை 'அமரர்' என்று அஞ்சாமல் அழைப்பது "அவாள்" வரிசையில் உள்ளவர்களைத்தான். திறமை காரணமாக அழைப்பதென்றால் கம்பனையல்லவா "அமர கம்பன்" என்று அழைத்திருக்க வேண்டும். "அமரகவி பாரதி" என்பது எவ்வளவு துவேஷங்கொண்டு தெரியுமா?

தங்கள் விதேயன்,
எமதர்மன்.

● **குறிப்பு:—** இறைவன் திருவடிக் காவது அவர் வந்திருக்கிறாரா வென்றால், இல்லை என்று திட்ட வட்டமாகக் கூற முடியும், சுட்டு சாம்பலாக்கிய பின்னர், ஆற்றின் கரையடியிலும்; எஞ்சியது கடலின் அலையடியிலும் தான் போயிருக்க முடியும்.

●

மாயூரம்

ஆசிரியர் வேலாயுத மன்ற பொது உறுப்பினர்கள் கூட்டம் **27-11-55** ஞாயிறு இரவு 8-மணிக்கு மன்ற கட்டிடத்தில் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. அதுபோது மன்ற 5-வது ஆண்டின் புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் தோழர் அ. செங்குட்டுவன், துணைச் செயலாளர் தோழர் க. மாரிமுத்து, பொருளாளர் வெ. ஆறுமுகம் ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் என். கிட்டப்பா, வி. சங்கையன், மா. உத்திராபதி, த. கணேசன், சி. ராசமாணிக்கம், ந. நரிசாவலன், கோ. கரிகாலன், ஜி. கலியமூர்த்தி, ந. இளங்கோ, ஜெ. சிகாமணி, எ. ஜோசப், அந்தோணிசாமி, எம் ராமசாமி, இரா. சுப்பிரமணியன்

மன்ற உறுப்பினர் தோழர் க. மாரிமுத்து அவர்களின் தாயார் சுந்தராம்பாள் அம்மையார அவர்கள் ஐப்பசி மாதம் 17-ந் தேதி இயற்கை எய்தியது குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மறுமலர்ச்சி மன்ற துவக்க விழா!

கோவை ஆர். எஸ். புரம் இராமலிங்க ரோடு 11/45. எண் இல்லத்தில் சனிக்கிழமை 26—11—55 மாலை 6-மணிக்கு தோழர், எ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அது சமயம் தோழர்கள், அ. பொன்னம்பலனார், கோவைச் செழியன், சி. டி. தண்டபாணி, குந்தாம்பள்ளி (கேரளம்) வாதராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள் விழாவிற்கு மே. அ. இரத்தினம் தலைமை தாங்கினர். செயலாளர் ம. மாணிக்கம் நன்றி நவில இனிது முடிந்தது.

மணப்பாடு

மணப்பாடு அர்ச் சூசையப்பா உயர்நிலைப்பள்ளி மாணவர்களது 'வீரமாமுனிவர் தமிழ்க் கழகத்தின்' சார்பில் 6-12-55 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு திரு. க. சந்திரசேகரனார் தலைமை வகித்தார் 'அன்றும் இன்றும்' என்று தலைப்பின் கீழ் தோழர், சன்முகம் குலசேகரன் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க சிறந்ததோர் சொற்பொழிவாற்றினர்.

'சிந்தனை' தோற்றம்

திருச்செங்கோடு திராவிடரியக்கத் தோழர் பி. பெருமாள் அவர்கள் 6—12—55 அன்று சேலம் ஜில்லா அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்பு சிந்தனை என்ற பத்திரிகைக்கு தயமை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் பதிவு செய்துகொண்டார். இதழ் இவ்வூர் "ஜனோபகார பிரஸ்" ஸில் அச்சிடப் பெற்று கூடிய விரைவில் வெளிவர ஆவன செய்யப்பட்டு வருகிறது.

கைத்தறி

ஆடையையே அணியுங்கள்

நடிப்பு - இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் ஆற்றலும் - ஆர்வமும்.

★

நம் நாட்டின் கலைத் துறையில்-சிறப்பாக, நாடகப்-இசை ஆகியவற்றில், குறிப்பிட்ட இனத்தவர் மட்டுமே ஆதிக்கம் செலுத்தியும் அதே சமயத்தில் பிறருக்கு அந்தத்திறமை சிறிதும் கிடையாது, முயற்சித்தாலும் புத்தியில் ஏறாது என்றெல்லாம் சொல்லிவந்த காலம் ஒன்றுண்டு ! அதன் விவரத்தை நாம் இங்கே வெளியிடுவதெனின் இடமும் கொள்ளாது

சங்கீதமா—அரியக்குடி ராமாநுசய்யங்கார், செம்மங்குடி சீனு, மதுரை மணி அய்யர் ஆகியவர்களின் பெயரும், நாடகத் துறையில், ஆரியகான செல்லப்ப-அனந்த நாராயண அய்யர்களிலிருந்து, எஸ், ஜி. கிட்டப்பாக்கள் வரை எல்லாம் "அவாளே" தான் !

காஞ்சிபுரம் நைனு பிள்ளை, அவரது சீடர் சித்தூர் சுப்ரமண்யம் போன்றவர்கள் சங்கீதத் துறையிலே 'அவாளை" விட ஆற்றல் மிக்கவர்களா யிருந்தும்கூட அந்நாளில் அவாளுக்கிருந்த அரசியல் — சமுதாய ஆதிக்கங்களினுலும் பத்திரிகை பலத்தினுலும் திராவிட பெரும் சமுதாயத்தில் ஏதோ அத்தி பூத்ததைப் போலே இரண்டொருவர் தலை தூக்கினுலும் அதனைச் சிதறடித்து வந்தனர்.

இந்த ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து திராவிட சமுதாய மக்கள், தங்களின் முழு உரிமையைப் பெற முடியா விட்டாலும் ஓரளவாவது தங்களின் அறிவாற்றலை அவனியோருக்கு எடுத்துக் காட்டும் அரிய வாய்ப்பானது, பார்ப்பனரல்லாதார் இயக்கம், சுயமரியாதை இயக்கம், திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய பாசறைகளின் பணியினுலே சிறுகச் சிறுகத் தொடர்ந்து வளர்ந்து, இன்று அரசியல்—முதல் கலைத் துறைவரை திராவிடப் பெருங்குடி மக்கள் ஓரளவு தலை நிமிர்ந்து நடைபோடச் செய்திருப்பதை — நேர்மை உள்ளம் படைத்த அனைவரும் மனதாரப்புக் கொள்வர்.

*

சங்கீத உலகில் அரியக்குடி-செம்மங்குடிகள்மட்டுந்தான் நடமாடமுடியும் என்ற கித்தாப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இன்று தண்டபாணி தேசிகர், கே. பி. சுந்தராம்பாள், தியாகராச பாகவதர் போன்றவர்களின் புகழும் உச்சநிலையிலிருந்து வருகிறது.

அதுபோலவே நாடகத் துறையிலும் செல்லப்பா - கிட்டப்பாக்கள் மட்டுந்தான் வெளிச்சம் போட முடியும் என்று சவடால் அடித்துவந்தவர்கள் திகைப்புறும் வண்ணம் இன்று கலைஞர்கள் என். எஸ். கிருஷ்ணன், எம். ஆர். ராதா, கே. ஆர். ராமசாமி, டி. கே, எஸ். சகோதரர்கள், எம். ஜி. ராமச்சந்திரன், எஸ், எஸ், ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி போன்ற இன்னும் பல சிறந்த நடிகர்கள் திக்கெட்டும் தங்களின் புகழை பரப்பி வருகின்றனர்.

இந்த மாற்றத்துக்குக்காரணம் திராவிட இயக்கமேயாகும் என்பதை நமது அண்ணு அவர்கள் மேடைகளிலும், ஏட்டிலும் விளக்கி வந்திருப்பதை வாசகர்களுக்கு இது சமயம் நினைவூட்ட விரும்புகிருேம்.

*

எனவே திராவிட முன்னேற்றக் கழகப், அரசியல் துறையில் மட்டுமல்லாது—சமுதாயத் துறையிலும், கலைத் துறையிலும் தனது கவனத்தை ஓரளவு செலுத்தி வருகிற தென்றுல், அது இம்மாநில மக்களின் பொதுவான சிறப்பை எந்த அளவுக்கு உயர்த்திவருகிறதென்பதைஅனைவரும் சிந்திக்க வேண்டுகிருேம்,

*

இசை—நாடகத் துறைகளில் ஈடுபட்டிருந்த கலைஞர்களின் தொண்டு, ஏதோ அவர்களின் வாழ்வுக்காக மட்டுமல்லாது, நாட்டின் நல் வாழ்வுக்கும் கூடுமான அளவு பயன்படுதல் வேண்டும் என்பதற்காக அறிஞர் அண்ணு அவர்கள் எடுத்துக் கொண்டமுயற்சியும் அதற்கேற்ப தங்களின் பணியை ஒழுங்கு படுத்திக்கொண்டு மக்களின் அளவு கடந்த ஆதரவைப் பெற்று வருவதை சம்பந்தப்பட்ட நடிகர்களும், இசைப் புலவர்களும் நன்கு அறிவர்.

●

திராவிட இயக்கத்தின்—அண்ணு அவர்களின் அத்தகு தொண்டின் காரணமாக திராவிடத்துக்குக் கிடைத்த முக்கிய கலைச் செல்வர்களில் ஒருவரான நடிப்புப் புலவர்

நடிப்பு இசைப் புலவர்
கே. ஆர். இராமசாமி

கே. ஆர், இராமசாமி அவர்கள், நாடக-திரைப்பட உலகில் பெற்றுவரும் இணையற்ற புகழையும், அதுபோலவே நாடக-திரைப்படம் மூலம் சமுதாயத்தில் மலிந்துள்ள கேடுகளை அகற்றவேண்டும் என்ற உறுதியான கொள்கைகொண்டு தொண்டுபுரிந்து வருவதையும் தென்னுட்டு மக்கள் நன்கு அறிவர்.

மற்ற நடிகர்களைவிட கே. ஆர். ஆர். அவர்களுக்கிருக்கும் தனிச்சிறப்பு—சாரீர அமைப்பேயாகும். நாடகங்களிலும், திரைப் படங்களிலும் அவரது சாரீரத்தின் இனிமையையும் சங்கீதத்தின் உயர்வையும் ரசிகர்கள் மகிழ்ச்சியுடன் சுவைத்து வருவதையும் நாம் அறிவோம்.

அவ்வித ஆற்றல் படைத்த நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் சங்கீத உலகிலும் (இசையரங்கு) தமது பணியினைச்செய்ய முனைந்திருப்பது கண்டு நாம் மட்டு மல்ல திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருமே களிப்படைவர் என்பதில் ஐயமில்லை.

அந்த அரிய நிகழ்ச்சி — தமிழகத்தின் தலைநகரில் — சென்னை கோகலே மண்டபத்தில், 10-12-55 அன்று நடந்தேறியது.

●

சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பில் தி. மு கழக மாநில மாநாட்டின் நிதிக்காக—நடிப்புப் புலவர் கே, ஆர். இராமசாமி அவர்கள் தக்க, பக்க மேளத்துடன் இசை விருந்தளித்தார், அன்று அவர் பாடிய பாடல்களில் "சொர்க்கவாசல்" திரைப் படத்தில் பாடப்பட்டதாகும். எனினும் அன்று நேரில் அப்பாடல்களைக் கேட்ட ரசிகர்கள் பெற்ற இன்பத்தினைச் சொல்லி முடியாது.

அன்றைய இசை விருந்தில் நடிப்புப் புலவர் "செயலாற்று அல்லது செத்துமடி" என்ற பாடலைப் பாடிய போது கோகலே மண்டபமே அதிரும்படி ரசிகர்கள் தங்களின் மகிழ்ச்சியை, பாராட்டுதலை கை தட்டுதல் மூலம் காட்டியதை என்றும் மறக்க முடியாததாகும்.

மற்றும் கர்னுடக சங்கீதத்தில் கே. ஆர். ஆர். தமக்குள்ள திறமையை எடுத்துக் காட்டும் வகையில் ஸ்வர-ஆலாபனை முதலியவைகளின் மூலமும் மகிழச் செய்தார்,

இத்துறையில், நடிப்புப் புலலவர் கே. ஆர். ஆர். அவர்களுக்கு இதுதான் முதன் முயற்சி என்று சொல்லப்பட்டாலும் இதற்காக அவர் நீண்டநாள் தமது காலத்தையும், கருத்தையும் செலவழித்து பண்பட்டிருக்கிருர் என்பதை அன்றைய இசைவிழா எடுத்துக்காட்டிற்று.

எனவே நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள்தொடர்ந்து இத்துறையில், தமது பணியினைச்செய்ய முற்படுவாரேயானுல் இசையரங்கிலும் அவரது ஆற்றல் வெற்றி நடை போடும் என்பதில் ஐயமில்லை.

அருமை நண்பர் கே. ஆர். ஆர். அவர்களுக்கு நாம் விடுக்கும் வேண்டுகோளும் இதுதான்.

அன்றைய—இசை விழா சங்கீத லட்சணத்தோடு முற்றிலும் அமைந்திருந்ததா என்று சிலர் கேள்வி எழுப்பக்கூடும், நாம் அதனை மறுக்கப் போவதில்லை. ஒரு சிறு தவறுகள் இருந்திருக்கலாம். ஆனுல் கே. ஆர். ஆர். அவர்கள் தமது முதல் முயற்சியிலேயே கூடுமான அளவு வெற்றிப் பாதையில் நடைபோட்டிருப்பதை எவரும் மறுக்க இயலாது.

எனவே, அன்றைய விழாவிற்கு தலைமைவகித்துச் சிறப்பித்த தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்' **இன்னும் நாலைந்து இசை நிகழ்ச்சிகளுக்குள் நடிப்புப் புலவர் கே-ஆர், ஆர், அவர்களின் இம்முயற்சி வெற்றிவாகை சூடும் என்று குறிப்பிட்டுள்ளதையே நாமும் பெருமையுடன் சுட்டிக் காட்ட விரும்புகிருேம்,**

அதுபோலவே—கே. ஆர், ஆர். அவர்களுக்கு, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்கள், அன்றைய இசை விழாவின்போது, நடிப்பு-இசைப் புலவர் என்ற சிறப்புப் பெயரைச் சூட்டியதையும் பூரிப்புடன் வரவேற்கிருேம்.

நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். ஆர். அவர்களின் இப்பணியையும், ஆர்வத்தையும் மேலும் சிறப்பிக்க, தமிழகத்தில் பிற மாவட்டங்களிலுள்ள நமது தோழர்கள் ஆவன செய்யவும் கேட்டுக்கொள்ளுகிருேம்.

10—12—55 இசைவிழா இனிது நிறைவேற நடிப்பு—இசைப் புலவருக்கு பக்கத் துணையாய் நின்று பிடில், மிருதங்கம், கஞ்சிரா முதலிய துணைக்கருவிகள்மூலம்நிறைவு பெறச்செய்த அவரது குழுவினரையும் நாம் பாராட்டுகிருேம். —'வீரன்'

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16/99, அம்மன் கோயில் தெரு, சென்னை-1